விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 16 ஞாயிற்றுக்கிழமை (02.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 287

# விடுதலைப் புலிகளிற்கு எதிரான பிரசாரத்தில் அரச பிரதிநிதிகளைக் கொண்ட இரகசியக்குழு

## லண்டனில் இயங்குவதாக தகவல் கசிவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை உலக நாடுகள் தடைசெய்ய வேண்டுமென்ற பிரசார நடவடிக்கைகளில் லண்டனை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் குழுவொன்று ஈடுபடுவதாக தகவல் வெளியாகியுள்ளன.

இலங்கையில் உள்ள அனைத்து இனவாதக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இக்குழு செயல்பட்டு வருகிறது. விடுதலைப்புலிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடை விதிப்பதற்கும் இக் குழுவே மூலகாரணம் என தெரிய வந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐஸ்கிறீம் வியாபாரி சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனையில் நேற்றுக்காலை ஐஸ்கிறீம் வியாபாரி ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கல்முனை பௌத்த விகாரைக்கு அண்மையில் அவர் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை முடிக்கி விட்டுள்ளனர். (ச-4)

## ஜனாதிபதி சந்திரிகா பிரான்ஸ் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் காலை பிரான்ஸ் பயணமானார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நாளை நடைபெறவிருக்கும் யுனஸ்கோ பொது மாநாட்டின் மூன்றாவது கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காகவே ஜனாதிபதி பிரான்ஸ் பயணமானார்.

இவ்வருட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்ட இரண்டு தேசத் தலைவர்களில் ஜனாதிபதி சந்திரிகாவும் ஒருவராவார். மற்றையவர் கானா குடியரசின் ஜனாதிபதியாவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவு வேளை ஆலயத்தினுள் வைத்து இரண்டு இளைஞர்கள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அதே இடத்தைச் சேர்ந்த மாதவன் உமாதரன் (வயது - 23) எனவும் மற்றையவர் நாவற்குடாவைச் சேர்ந்த தில்லைநாதன் மதிவதனன் (வயது 24)

(12 ஆம் பக்கம் பார்க்க)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் செந்தளிர் சிறுவர் இல்லத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் இல்லச் சிறுவர்களுக்கு மலர்மாலை அணிவித்து பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கௌரவிக்கப்பட்ட சிறுவர்களை படத்தில் காணலாம்.

## மகிந்தவின் விஞ்ஞாபனத்தின் பின்னரே முஸ்லிம் காங்கிரஸின் முடிவு தெரியும்

### தேசிய அமைப்பாளர் பாயிஸ்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் வரை எந்த வேட்பாளரை ஆதரிப்பதென அறிவிக்க முடியாதுஎன சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தேசியஅமைப்பாளர் கே.எம்.பாயிஸ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் முக்கிய உறுப்பினர்கள், கிளை உறுப்பினர்கள் என ஆயிரத்து 600பேருடனும் பாராளுமன்ற மாகாண சபை உறுப்பினர்களுடனும் பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டதாகவும் அவர்கள் அனைவரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சு.க-ஜே.வி.பி. ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைவு

(கொழும்பு)

மாத்தறை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஜே.வி.பியினதும் ஆதரவாளர்கள் ஆயிரத்து 200பேர் வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்துள்ளனர்.

ரணில் விக்கிரம சிங்க மற்றும் உபதலைவர் கருஜெயசூரியாவின் தலைமையில் இவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்காவிற்கு ஆதரவு தெரிவித்து தங்களை அக்கட்சியில் இணைத்துக் கொண்டதாக அவர்கள் கூறினார்கள்.

இனவாதக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைப்பறிச்சான் கடற்படை முகாம் படம் எடுக்கப்பட்டதாக முறைப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை கட்டைப்பறிச்சான் கடற்படை முகாமை ஒரு குழுவினர் வீடியோப் படம் எடுத்தாக கடற்படையினர் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான சம்பூர் பிரதேசத்திற்கு அருகில் உள்ளது கடற்படையின் கட்டைப்பறிச்சான் முகாம். அம் முகாமை கடந்த 29ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் சிலரால் வீடியோப்படம் எடுக்கப்படுவதை படைவீரர்கள் அவதானத்துள்ளதாக கடற் படை உயர் அதிகாரிகள் திருகோணமலை கண்காணிப்புக்குழுவினருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். (ச-4)

SWISS Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 22

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சுனாமிப் பேரழிவிலிருந்து மீண்டவர்களுக்கான தேசியம் நோக்கிய ஆற்றுப் படையரங்காலயம்

அரங்கு சமூக மேம்பாட்டிற்கும் அதன் வழிப்படுத்தலுக்குமான பாதையைத் திறந்துவிடும் கருவி இங்கு உணர்வுகளின் உண்மை வெளிப்பாட்டிற்கான இடம் கிடைக்கிறது. எனவே"சுதந்திரப் பிரகடனம் இடம்பெறும் இடம் அரங்கு" ஒவ்வொரு மனித மனமும் தன்னுடைய ஆழ்மனத்தின் உணர்வுகளையும் விருப்புகளையும் எந்தத் தடையுமின்றி வெளிப்படுத்தக் கூடிய நிலைமை அரங்கில் உண்டு.

இவ்வாறான வலுவுடைய அரங்கினை மூலதனமாய் கொண்டு முல்லை மாவட்டத்தில் அரங்க செயற்பாட்டுக்குழுவுடன் அம் மாவட்டத்தில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களும் இணைந்து அரச சார்பற்ற நிறுவனத்தில் ஒன்றான **unicef** நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற முல்லை மாவட்ட மக்களுக்கான ஆற்றுப்படுத்தல் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுனாமி வேர்கள் ஆழமாய்ப் பதிந்து முற்றுகையிட்ட ஈழத்தின் முக்கிய பகுதிகளில் முல்லைத் தீவும் ஒன்று.சுனாமிப்பசி தீர்ந்து இன்று ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன.ஆயினும் அவலப்பட்டு பட்ட மரங்களாகிவிட்ட முல்லை மக்கள் அவலங்களிலிருந்து மீண்டு எழுதல் தூர இலக்காக நகர்கிறது. ஆனாலும் அவர்களின் மனங்கள் மெல்லமெல்ல ஆற்றுப்படமுடிகிறது. சொல்லொணா வடுக்களால் சூழ்ந்து தவிக்கிறார்கள்.

உலகநாடுகளால் ஆழிப்பேரலை அனர்த்தத்திற்காய் கொடுக்கப்பட்ட நிதி உதவிகள் சிங்களப பேரினவாத சக்திகளின் சதியால் மறுதலிக்கப்பட்டமை தடைசெய்யப்பட்ட நிதிகள்,ஓரவஞ்சக நிலைமைகள் இவை அனைத்திற்கும் நடுவில் தங்கள் மீள் கட்டுமானத்திற்காய் போராடும் இந்த மக்கள் அன்றாட வருவாய்க்கும் தொழில் முதல் அற்றவர்களாய் அவஸ்தைப் படுகின்றனர்.இத்தகைய கண்மூடித்தனமான சிங்கள அரசாட்சியின் காரணமாக ஆளையாள் பிய்த்துப் பிறாண்டும் கோர அவலங்கள் சங்கிலித் தொடராய் நீள்கிறது.

இந்நிலையில் அவலம் நீங்க ஆற்றுப் படையரங்க செயற்பாட்டில் ஈடுபடும் அரங்க செயற்பாட்டுக் குழுவினர் குறித்த மக்களை பக்குவமாக தங்கள் பிரச்சினையை வெளியே எடுத்துச் சொல்வதற்கான முறையில் அவர்களை தயார்படுத்தல் என்னும் நோக்கில் தொடர் அரங்க செயற்பாட்டின் ஓர் கட்டமாக 04.09.2005 அரங்காலயத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் ஒன்றுகூடினர். பங்குகொண்ட மக்களுடன் அரங்க செயலாளர்களும் ஒன்றாக இணைந்து அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொருவரின் கருத்துக்களும் பரிமாறப்பட்டன. அதனூடாக அவர்களிடம் ஓர் நம்பிக்கை வலுவுற்றது. வலுவான தொடர்பாடல் ஊடாக தங்கள் பிரச்சினைக்கான மூலகாரணிகளை இனம்கண்டு பக்குவமாக தங்கள் பிரச்சினைகளை உலகத்திற்கு வெளியெடுத்துச் சொல்ல முனைப்புற்றனர். கூட்டம் என்றாலே சலித்து ஒதுங்கிக் கொள்ளும் மக்களின் அனுபவத்தில் இன்று தாங்கள் கூடியதன் உன்னதம் என்ன என்று அவர்களே விதந்து கூறினர்.

''எத்தனையோ உதவி வழங்கும் நிறுவனங்கள்

"கூட்டம் கூட் டம்"என்று கூட்டும் ஆர்ப்பாடம் போடும்; பதியும் ஒன்றும் நடப்பதில்லை. இண்டைக்கு அப்படி ஒன்றுமேயில்லை. ஆனால் இன்று திருப்தியாக இருக்கு எங்கட கதையைக் கேட்க வழிகண்டு பிடித்தது"அம் மக்கள் சினந்து கொள்ளவில்லை. சுமந்து வந்த பிரச்சினை மூடைகளை இறக்கி வைத்தனர். பிரித்துப் படித்தனர். அக்கினிப் பிளம்பாக அதைப் பகிர்ந்து கொண்டனர்.

அரங்காலயத்தில் அதற்கான இடம் அவர்களுக்குக் கிடைத்தது.

இதுபற்றி கலந்துகொண்ட மக்களில் ஒருவர் கூறியகருத்து, "எவ்வளவோ நிறுவனங்களை சந்தித்தோம்.இன்றைய நாளில் எங்கட மன்தில் என்னென்ன இருக்கோ அதெல்லாம் கேட்டுக் கதைத்த மாதிரி நாட்கள் வேறு இல்லை. சுனாமிக்கு பிறகு காணாத சந்தோஷத்தை நாங்க இங்க கண்டோம். இது நிச்சயமா எங்கட பிரச்சினை தீரும் வழி என்று கண்டோம்"

கணவனை இழந்தும், மனைவியை இழந்தும், பிள்ளைகளை இழந்தும், பெற்றோரை, உடன் பிறப்பை இழந்தும் தனித்தனி உறுப்பினர்களாய்க் கூட எஞ்சி நிற்கும் மக்களின் கனாமிப் பேறுகள் சொல்லில் அடங்காது. தன் துணைவியை இழந்த தனியான ஓர் அறுபது வயது ஐயா.

"மனைவியை இழந்து கவலைப்பட்டேன். இண்டைக்கு இந்த இடத்தில் என்னை அறியாமலே கையைத் தட்டினேன். சந்தோஷமாய்க் கிடக்கு" எனக் கூறினார்.

கடற்றொழில் செய்யும் ஓர் இளம் வாலிபன் கூறிய கதை இது."என்ர தங்கச்சி கடலோடு போட்டுது.என்ர சித்தப்பாவுக்கு ஓர் பெடியன், அண்ணான்ர மனுசி, மாமி எல்லாம் போட்டினம். எனக்கு கலியாணம் பேசிவைச்ச மச்சாளும் கடலுக்குதான். நினைக்கேலாது. எல்லாம் போட்டுது. இந்த அரங்காலயத்துக்கு வந்து எங்கட மனங்கள் ஆறுதல் அடையுது. நீங்கள் எல்லா முகாமுக்கும் வர வேணும்"

"இண்டைக்கு நாங்கள் சிரிச்சம்"

"எங்களுக்கு வடிவான சந்தோஷமாய் இருக்கு"

"இவ்வளவு கதைச்சதே. வயிறு நிரம்பிட்டது பசியில்லை"

"கூட்டம் போடாமல் ஆர்ப்பாட்டம் போடாம எங்கள் ஒவ்வொருவர் கதையைக் கேட்டது. திருப்தி"

என்று தமது உள்ளத்திலிருந்த சுமைகளையெல்லாம் அரங்காலய வெளியில் கொட்டிப் பரப்பினார்கள்.

அரங்கு அவர்களுக்கு பேசுவதற் கான வெளியைக் கொடுத்தது. மனம் திறந்து சிரிப்பதற்கான உணர்வைக் கொடுத்தது.அதன் உறவுப்பலம் அவர்களை ஆற்றுப் படுத்தியது. இவ் வெளிப்பாட்டுத் தளத்தின் மூலமாக தங்கள் பிரச்சினைகளை அவர்கள் வெளிக் கூறினர்.அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சொல்லில் அடங்காதவை. அவர்களின் எதிர்காலம் பற்றிய கேள்விகளும் ஏராளம்.

☼.கடல்தொழில் வளம் இல்லாத பிரச்சினை.

☼ வீடுகட்டுவதற்கான பணம் ஒதுக்கப்பட்டாலும் காணி இல்லாத பிரச்சினை.

☼ பிள்ளைகளுக்கான வேலை வாய்ப்பு.

☼வேறுபாடு காட்டுதல் உதவிக் கொடுப்பனவுகள்.

☼ துணை இழந்த பெண்களுக்கான தொழில்.

☼வந்தான் வரத்தான் என ஒதுக்கப்படும் பிரச்சினை.

☼இடம்பெயர்ந்தவர்களுக்கும் நிரந்தர வசிப்பிடம் உள்ளவர்களுக்கும் இடையேயான பிரச்சினை.

உதவி நிறுவனங்கள் இம்மக்களின் தேவைகளை அறியாமை.

☼ அடிக்கடி கூட்டங்களால் ஏற்படும் சலிப்பு.

☼ போக்குவரத்து, மின்சாரம், கல்வி என பல அடிப்படைப் பற்றாக்குறைகள்.

எனப் பிரச்சினைகளின் பட்டியல் நீண்டுசெல்கிறது.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் விடைதேட முயன்ற மக்கள் கூறிய கருத்து இது "எங்கள் அவசியமான தேவைகளையும் எங்களுக்கு ஏற்படுகிற பிரச்சினைகளையும் இனம்கண்டு தொகுத்து கட்டம் கட்டமாக சம்பந்தப்பட்ட செயலாளர்களுடன் இண்டைக்கு நடந்த மாதிரி சந்தோஷமும் விருப்பமும் தருகின்ற உறவுங் கூடிய சந்திப்பைப் போல அவர்களுடன் சந்தித்து கதைப்பம். படிப்படியா எங்கட பிரச்சினையைத் தீர்ப்பம். எல்லாமே எங்கட எதிர்காலத்தை கட்டி எழுப்புவதற்காகவே"

ஆனால் "எங்களுக்கு வாறதையெல்லாம் சிங்கள அரசு தடுக்கிறது. சுனாமி அவலத்தைக் கூட கண்டும் காணாத மாதிரி இருக்கு தமிழ்மக்கள் ஒன்றுதிரண்டு எழ அத்திவாரமாக இந்த நாள் இருக்கு"

என்று முல்லை மாவட்டத்தின் கல்லாறு தொடக்கம் அளம்பில் வரையான வாழும் இடம் பெயர்ந்த மக்களின் அபிப்பிராய முதல்வர்களாய் கலந்துகொண்ட மக்கள் விதந்துரைத்தனர்.

தேசியத்தின் பலமும் தேசத்தின் விடுதலையும் மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள.

"எங்களுக்கு உரிமை கிடைக்காட்டி நாம் பேராடுவோம்.மக்களெல்லோரும் ஒன்றுகூடி எங்கள் குரல் ஓங்கி ஒலிக்க உரக்கச் சொல்வோம்.

என்ற நம்பிக்கையுடன் நிமிர்ந்தனர்.

"நாங்கள் சுதந்திரமான தமிழீழத்தில் வாழ விரும்புகிறோம். எங்களுக்கு நடைமுறையில் ஓர் உன்னதமான ஆட்சி இருக்கிறது. அதை அங்கீகரிக்கும் படி உலக நாடுகளுக்கு உரத்துக் கூறப் போகிறோம்"

மக்கள் சக்தி மாபெரும் சக்தி. அது ஒரு காட்டாறு வீறுகொண்டு எழுந்துவிட்டால் மலை என்ன மடுவென்ன தன்பாட்டிற்கு இலக்கை அடைவதற்காய் வேகம் கொண்டு வீறாப்புடன் அடித்துச் செல்லும்.மக்களின் சுதந்திரம் மக்களாலேயே பெறப்படும். □

**க.துகாரதி**
**அரங்க செயற்பாட்டுக் குழு**

## 11 ஆயிரம் மருத்துவ தாதிகள் நியமனம்

நாட்டில் உள்ள வைத்திய சாலைகளில் நிலவும் தாதிமார் பற்றாக்குறையை நீக்கவென மேலும் 11ஆயிரம் தாதிமார் இரண்டு வருடங்களில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் 4 ஆயிரத்து 500 தாதிமார் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 5ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவ தாதி என்ற அடிப்படையில் மேலும் 2ஆயிரத்து 200 மருத்துவ தாதிமாரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)

## க.கா.குழுவினரின் வீட்டில் தீ

மன்னாரில் உள்ள யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்களின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி அறிந்ததும் மன்னார் பொலிஸாரும் இராணுவத்தினரும் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று வீட்டு ஜன்னல்களை உடைத்து 3 உறுப்பினர்களையும் காப்பாற்றியதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டியின் வயர்களில் தீப் பற்றியதால் முழுவீடும் புகை மண்டிக் காணப்பட்டுள்ளது இதனால் கண்காணிப்புக் குழுவினர் மூச் செடுக்க சிரமப்பட்டு உதவி கோரி கத்தியுள்ளனர். இவர்களின் வீட்டிற்கு அருகில்பாது காப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் உடன் விரைந்து இம் மூவரையும் காப்பாற்றியுள்ளதுடன் தீயையும் அணைத்துள்ளனர். (த-4)

## இராஜகோபுர திருப்பணி

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி சிவகாமி அம்மன் கோயிலில் 5 தளங்களைக் கொண்ட 54 அடி உயரமுள்ள இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணி இடம்பெற்று வருகிறது.

கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று ஆலயத்தின் முன்னாள் போஷகர் க.பொன்னையாவினால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பமான இத் திருப்பணி அப்பகுதிப் பொதுமக்களின் நிதி உதவியுடன் சிரமதானப் பணியாக இடம்பெற்றுவருகிறது.

இராஜகோபுரத் திருப்பணிச் சபையின் உபதலைவர் மா. உதயகுமரனின் நெறிப்படுத்தலில் தென் இந்தியா(மாமல்லபுரம்) சிற்பாச்சாரி ஞானமூர்த்தியினால் இக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது என திருப்பணிச்சபைத் தலைவர் மா.குணசிங்கம் அறிவித்துள்ளார். (து-36)

## ஆண்டு நிறைவுவிழாவும் மலர் வெளியீடும்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீட்டு விழாவும் இன்று அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கழகத் தலைவர் எஸ்.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குக் கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு மகளிர் விவகார அமைச்சுச் செயலாளர் வீ.எஸ்.சுவாமிநாதன் கலந்து கொள்வார். 20 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டுரையை யாழ். செயலக கணக்காய்வு அத்தியட்சகர் எஸ்.கனகசிங்கம் நிகழ்த்துவார்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு மலர் ஆய்வுரையை நிகழ்த்துவார். (ற-52)

## திருக்குறள் மனனப்போட்டி

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த தரம் 4, 5 மாணவர்களுக்கான திருக்குறள் மனப்போட்டி எதிர் வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (த-108)

# பட்டொளி வீசிய கதிரவன் பாதியில் மறைந்ததேனோ



நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும் பெருமையுடைத்து இவ்வுலகு என்பது வள்ளுவன் வாக்கு.

நேற்று இருந்தவர் இன்றில்லை என்பதுதான் இந்த உல்கத்துக்குரிய பெருமை என்ற வள்ளுவனின் முடிவு எத்தனை நிஜமானது.

ஆம், நேற்றுவரை எம்மோடு உறவாடித் திரிந்த இளவல் சிவலோகநாதன் விதுர்ஷன் அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லை. இந்தச் செய்தியை நினைக்கும்போது நெஞ்சத்து இதயஅறைகள் இறுகிக்கொள்கின்றன.

இறைவா பட்டொளிபரப்ப உதித்த கதிரவனை நடுவானில் வைத்து ஏன் பறித்துக்கொண்டாய் என நா உதறுகிறது.

கல்வியில் சாதனை படைத்த விதுர்ஷன் ஆக்கத்திறனில் வல்லவன். அவனின் வரைபுகள் ஒவ்வொன்றும் தத்துவம் பேசுவன.

உள்நாட்டில் மட்டுமல்ல அகில இந்திய ரீதியில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டிகளிலும் பங்குபற்றி புகழ் தரும் பரிசுகளை விதுர்ஷன் பெற்றுக்கொண்டான்.

எங்கள் இணுவையூர் மைந்தன் அகில இந்திய ரீதியில் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் பரிசுபெற்ற செய்தியால் இணுவில் மண் பூரிப்படைந்தது.

இறைபக்தியும், சமூகசேவையும், பரோபகார சிந்தையும்கொண்ட தொழில் அதிபர் இணுவையூர் கே. ஆர்.சிவலோகநாதன் இராஜதேவி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் விதூர்ஷன்.

தனது சிறுவயதிலேயே கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கினான். இணுவில் மண்ணுக்கு இருக்கக்கூடிய தனித் துவமான பண்பாட்டு உயர்வியலை இளவல் விதூர்ஷன் இளமைப் பருவத்திலேயே பின்பற்றினான்.

தானொரு சிறந்த மருத்துவனாக வர வேண்டுமென்ற வேட்கையில் கல்விகற்ற விதூர்ஷனுக்கு பாண்டிச் சேரியிலுள்ள PIMS (POND CHREY INSTITUTE OF MEDICAL SCIENCE) மருத்துவக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

**என்.விஜயசுந்தரம்**

தனது இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் இறைவன் அந்த அன்புள்ளத்தை தன்பால் எடுத்துக்கொண்டான்.


அகில இந்திய ஓவியப் போட்டிகளில் பங்கு பற்றி பல பரிசில்களுடன்

இளவல் விதூஷன் இன்று நம்மோடு இல்லையே. எனினும் அவனின் நினைவுகள் எம்முள் நீங்கா இடம்பிடித்துவிட்டன. விதூர்ஷன் இந்தப் பூவுலகத்திற்கு உரியவன் அல்ல. என்னருகில் இருக்கவேண்டியவன் என்றாங்கு இடைவழியில் அழைத்துச்சென்ற இறைவன் அந்த ஆத்மாவிற்கு நித்திய பேரின்பத்தை வழங்க வேண்டும். இதுவே நம் பிரார்த்தனை.

# ஐரோ. ஒன்றியம் தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

-இரா .சம்பந்தன்



நாட்டில் ஒற்றையாட்சியை வலியுறுத்தும் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நிகழ்வில் பங்கேற்ற அமைச்சராக உள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரை ஜனநாயக ரீதியாக அகற்ற மக்கள் முன்வரவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்நாடு சுதந்திரமடைந்து 50 வருட காலத்தில் ஜனநாயகப் போராட்டம்,சாத்வீகப் போராட்டம், பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் எனப் பல நிகழ்வுகள் நடந்துவிட்டன.

2002ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நிறுத்தத்திற்குப் பிறகு கடந்த மூன்றரை வருடகாலமாக தமிழீழத் தேசியப் பிரச்சினைக்கு ஒரு இடைக் காலத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் ஏங்கிக்கொண்டிருந்தனர்.

ஆழிப்பேரலை ஏற்பட்ட பிறகு அது தொடர்பாக நீண்ட தாமதத்திற்குப் பிறகு ஒரு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு அக் கட்டமைப்பைக் கூட அமுல்ப்படுத்த முடியாமல் ஒருபுறம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் ஒவ்வொரு தமிழ் மாவட்டத்திலும் தமிழ் மக்கள் ஒன்றுகூடி நடாத்தும் எழுச்சி மாநாட்டின் ஊடாக அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு செய்தியினை சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள்.

நாங்கள் விரக்தியின் விளிம்பில் நிற்கின்றோம். எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு ஏற்படும் என்பதில் நம்பிக்கை இழந்து இருக்கின்றோம். அதனால்தான் இதுபோன்ற பிரகடனங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பிரகடனத்தின் செய்தியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட கட்சிகளைச் சென்றடைய வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் சமாதானத்தீர்வு காணப்பட வேண்டும்;அது சமஷ்டி அடிப்படையில் அமையலாம் என்றெல்லாம் கூறிக்கொண்டு வருகின்றன.

முதல் முறையாக அவர்கள் அவ்விதம் கூறிய போதும் நடை முறை ரீதியாக தமிழ் பேசுகின்ற தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இடைக்காலத்தில் கூட குடிபெயர்ந்த எமது மக்களுக்கான மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அளிக் கக்கூட எமக்கு அதிகாரம் தரப் படவில்லை.ஆழிப் பேரலைக் கட்டமைப்பும் தற்போது முடங்கிக் கிடக்கிறது.

இப்படியான நிலைமையில் சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சமாதானம் தொடர்பாக பேசுகிற கட்சிகள் இந்த மாநாட்டுச் செய்தியைச் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் ஒரு நியாயமான நிரந்தரமான சமாதானத் தீர்வை எதிர்பார்க்கிறார்கள். அல்லது தங்களது முழுமையான சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி இருக்கிறார் கள் என்பதை அந்தக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

சர்வதேச சமூகம் எமது நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அது அவர்களது கடமை.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட காலம் முதல் மூன்றரை ஆண்டுகாலமாக தமிழ் மக்களுக்கு ஒரு இடைக்காலத்தீர்வை ஆழிப் பேரலைக்கான கட்டமைப்பைக் கூட கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. அந்த உண்மையை எவராலும் மறுக்க முடியாது.

அண்மையில் சர்வதேச சமூகத்தின் வன்மமாக ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பயணத் தடையை விதித்திருக்கிறது. இது துரதிஷ்டவசமானது. ஏமாற்றத்தையும் தருகிறது.இம் முடிவை அவர்கள் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த நாட்டில் அவர்களுக்குத் தொடர்பிருந்தும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்து பேசாமலேயே இம் முடிவை எடுத்திருக்கிறார்கள். இச் சூழலை சர்வ தேச சமூகம் தவிர்த்திருக்க லாம்.

இவ்விடயம் தொடர்பாக எமது பாராளுமன்றக் குழு அனைத்து நடவடிக்கையையும் மேற்கொள்ளும் என்றார்.

(ற-4)

## இராசி பலன்

**02.10.2005**
**(புரட்டாதி 16, ஞாயிற்றுக்கிழமை)**
**சதுர்த்தசி பிற்பகல் 3.09 மணிவரை**
**உத்தரம் பின்னிரவு 4.53 மணிவரை**
**இராகுகாலம் 4.32-6.02 மணிவரை**
**சுபநேரம் 9.02-10.32 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | சத்துருஜெயம், எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம், தெய்வசிந்தை. |
| இடபம் | குடும்பக் கவலை, தொழில் மந்த நிலை, முயற்சிதாமதம், ரோகநிலை. |
| மிதுனம் | மாதாசுகம், அதிக பிரயாசை, சுபசெலவு, நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | தனவருவாய், தொழில் நன்மை, காரிய நன்மை, சகோதரர் வழி உதவி. |
| சிங்கம் | கடினமுயற்சி, பணவிரயம், மனஸ்தாபம், உடல்நலக்குறைவு. |
| கன்னி | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, புதிய சிந்தை, போசனசுகம். |
| துலாம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உடல்நலக் குறைவு, மனஸ்தாபம். |
| விருச்சிகம் | பெருமையடைதல், தொழில் சிந்தை, உறவினர் வருகை, தெய்வ சிந்தை. |
| தனுசு | அதிகாரம், தூரதேசச் செய்தி, நண்பர்கள் உதவி, தொழில் சிந்தை. |
| மகரம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, கட்டுப்பாடு, முயற்சி தாமதம். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், பேசன சுகம், வாகன பயம். |
| மீனம் | குடும்ப நன்மை, பிரயாண நன்மை, முயற்சி கைகூடும், போசன சுகம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

# பொது நிலைப்பாடற்ற கூட்டுக்களால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது

ரணில் விக்கிரமசிங்க



(மாத்தறை)

பொது நிலைப்பாடு இல்லாமல் கூட்டமைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திய போதிலும் 18 மாதங்களுக்குப் பின்னர் அது பிளவடைவதற்கு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் காரணமல்ல. பிரச்சினைகள் தொடர்பாக கூட்டமைப்புக்குள் தோன்றிய முரண்பாடுகளே இதற்குக் காரணமாகும்.

கூட்டமைப்பு பிளவுபட்டு இரண்டு மாதங்கள் கடந்த பின்னர் புதிய கூட்டமைப்பு உருவாகியுள்ளது.

ஆட்சியிலிருந்த 18 மாதங்களில் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவர்களால் மீண்டும் கூட்டுச் சேர்ந்து எவ்வாறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்? என அவர் கேள்வி எழுப்பினார்.

பொதுமக்களின் பிர்ச்சினைகளை முன்னிட்டு ஜே.வி.பி கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை எனக் குறிப்பிட்ட எதிர்க் கட்சித்தலைவர், சுனாமி நிவாரண சபைக்காகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காகவும் தனித் தரப்பாக அங்கீகரிக்க வேண்டுமா? என்ற நிலை காரணமாகவே அக்கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது எனக் குறிப்பிட்டார்.

(த-4)



மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற 'வடக்கு சிறுவர் சமூகம்' அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட மாவட்ட நீதிபதி இ.த. விக்கினராஜா உரையாற்றுவதையும், இதில் இடம் பெற்ற சிறுவர்களின் நிகழ்வுக் காட்சி ஒன்றையும் அதில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-தவராசா)

# நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சிகிச்சை நிலையங்கள் மற்றும் வைத்திய சாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்களிற்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு இன்று ஞாயிற்றுக் கிழமையும், நாளை திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான நியமனக்கடிதம் மற்றும் உறுதிப்படுத்திய கடிதம் தற்போது பணிமனையில் வழங்கப்பட்டு வருவதாகவும் நியமனக்கடிதம் பெற்றவர்களைத் தவறாது நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறும் பணிமனையின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

பலவருடங்களாக எதுவித கொடுப்பனவும் பெறாது கடமை புரிந்த சுகாதாரத் தொண்டர்களிற்கு பல வருடங்களின் பின்பு இம்முறை நேர்முகத்தேர்வு நடைபெற்று நியமனம் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.(த-252)

# தேர்தல் நடவடிக்கை தீவிரம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான பாதுகாப்பு உட்பட சகலவித நடவடிக்கைகளும் தற்சமயம் மேற்கொள்ளப் பட்டு வருவதாக பொலிஸ் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெளிமாவட்டங்களில் 7 ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப் படவிருக்கின்றனர்.

அதேசமயம் உத்தியோகபூர்வ தேவைகளுக்கென 2ஆயிரத்திற்கும் அதிகமான வாகனங்கள் ஏனைய திணைக்களங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மாத்திரம் 65ஆயிரம் பொலிஸ் வீரர்கள் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

இத்திட்டத்தை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவென சகல பொலிஸ் வீரர்களினதும் விடுமுறைகள், இடமாற்றங்கள் என்பன இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டு


## சிறு விளம்பரம்

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் சகல வித கெமராக்கள் எலக் ரோணிபிளாஸ்கள் திருத்துதல் உதாரணமாக ஜெனரேட்டர் வாட்டர்பம் போன்றவற்றின் பாட்ஸ் கையடக்கமாக உள்ள பிளாஸ்டிக் பொருள் உடைவு ஒட்டுதல் போன்றவை விஷேசமாக செய்யப்படும் ரகு போட்டோ டெக்னிக் 301-கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். கன்னாதிட்டி சந்தி சமீபமாக இடம் மேல்மாடி தொடர்பு சு.நாராயணசாமி.

(9916)

### மரக்கன்றுகள் விநியோகம்

இந்து ஆலயங்களில் வைத்து வளர்க்கக்கூடிய நாகலிங்கப்பூ, வன்னி மரக்கன்றுகள் விநியோகிக்க எண்ணியுள்ளோம். ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ளவும்.
**Fancy Museum, 253B, GALLE Road, Wellawatte Complex, Colombo-6**
**T.P-0112 580216**

(9914)


## வருடாந்த மஹோற்சவம்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளன. (ற-9)

# பொங்கு தமிழ் உரிமைக் குரல்கள்

## பேரழிவு மிக்க போரைத் தவிர்ப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வர வேண்டும்

### யாழ். மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சி.விஜயரூபன்

எமது விடுதலைப் போராட்டப் பாதையில் இன்றைய நாள் ஒரு முக்கியமான நாள். எமது சுயநிர்ணய உரிமையினைச் சர்வதேசம் அங்கீ கரிக்க வேண்டுமெனக் கோரி சர்வதேசத்திடம் எமது அபிலாஷைகளைத் தெரிவிப்பதற்காக மக்கள் வெள்ளமாக இங்கு கூடியிருக்கின்றோம் கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் தமிழ் மக்கள் நிரந்தரத்தீர்வும் இன்றி அமைதியும் இன்றி இழுத்தடிக் கப்படும் சமாதானப் பேச்சு வார்த்தை என்ற வெறுமைக்குள் தத்தளிக்கும் அவல நிலையை சர்வதேசத்திற்குத் தெரிவிப்பதற்காக இங்கு கூடியிருக்கின்றோம்.

சர்வதேச சமூகம் மனிதாபிமான அடிப்படையில் நீதி நியாயத்தின் அடிப்படையில் எமது இனப்பிணக்கு விவகாரத்தை அணுகிக்கையாளும் என்ற நம்பிக்கையில் எமது உரி மைக்கான அங்கீகாரத்தை வழங்க வேண்டு மென ஒரே குரலில் உலகிற்குச் சொல்ல இங்கு கூடியிருக்கின்றோம். எமது உரிமைகளைப் போர் மூலம் மீட்டெடுக் கக்கூடிய இராணுவப் பலம் எம்மிடம் இருக்கின்ற போதும் சமாதான வழிமுறைகளில் தீர்வுகாண்பதற்கான பெரு விருப்பி லேயே ஜனநாயக ரீதியில் எமது உரிமைக் குரலை உலகிற்கும் சிங்கள தேசத் திற்கும் உரத்துச் சொல்வதற்காக இங்கு அலை யலாய் திரண்டு வந்துள்ளோம்.

சிங்கள தேசத்தின் பேரினவாத நிலைப்பாட்டினாலும் சர்வதேசத்தின் அலட்சியத்தினாலும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் சமாதான முயற்சிகள் முறிவடைந்து உருவாகப் போகும் பேரழிவு மிக்க போரைத் தவிர்ப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டுமென ஒரே குரலில் உரத்துச் சொல்ல நாம் இங்கு திரண்டுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தையைச் சீரான முறையில் முன்நகர்த்துவதற்கும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடியாகவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குப் படிப்படியாகவும் தீர்வு காணப்படவுமென ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்ட சிங்கள அரசு புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்து நடக்கவும் இல்லை. அதனை ஏற்றுக்கொண்டபடி அமுல்படுத்தவும் இல்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி பொது மக்களின் வாழ்விடங்களையும் வளமான விவசாய நிலங்களையும் ஆக்கிரமித்துள்ள இராணுவம் வாபஸ் பெறப்படவுமில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி மூன்றரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இராணுவம் மக்களின் வாழ்விடப் பரப்புக்களிலிருந்து விலகவில்லை.ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று கூறி மக்களின் இயல்பு நடமாட்டங்களை கட்டுப்படுத்தி இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைத்து வருகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நிராயுதபாணிகளாக அரசியற் பணிக்காகச் சென்ற நூற்றுக் கணக்கான போராளிகளைச் இராணுவம் ஆயுதக் குழுக் களுடன் இணைந்து கொலை செய்துள்ளது. மேலும் போராளிகள் மக்கள் மீதான வன்முறைகளையும் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தி வருகின்றது. தமிழர் தாயகப் பிரதேசங்களில் புதிது புதிதாக இராணுவ முகாம்களை அமைத்தும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை வேகமாக விஸ்தரித்தும் வருகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நோக்குடன் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புச் சின்னமான புத்தர் சிலைகளை ஆங்காங்கு திடீர் திடீரென நிறுவிவருகின்றது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மீன்பிடி உள்ளிட்ட பொருளாதாரச் செயற்பாடுகளை இராணுவம் மிக மோசமாக முடக்கியுள்ளது.

கலாசார விழுமிய வரலாற்றுப் பெருமைகளுடன் வாழ்ந்து வருகின்ற எமது இனத்தின் அடிப்படை ஆணிவேர் எமது கலாசாரமும் பண்பாடும் ஆகும். சிங்கள அரசு திட்டமிட்டு எமது கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைச் சிதைத்து எம் இனத்தை அழிக்கும் கேவல மான யுத்திகளையெல்லாம் கையாண்டு வருகின்றது.

அரசு இனப்பிணக்கிற்குத் தீர்வு காண்பதற்காகவென்று ஒருபுறம் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டு மறுபுறம் புலிகளுக்கு எதிரான சர்வதேசப் பிரச்சாரத்தைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. அரசு தனது இராணுவ இயந்திரத்தை தமிழ்மக்க ளுக்கு எதிரான போரிற்குப் பயன்படுத்தவென அசுர வேகத்தில் சர்வதேச ஆதரவைத் திரட்டி வருகிறது.

சீரழிந்துள்ள தனது அரசியல் இராணுவ, பொருளாதாரத் துறைகளை மீண்டும் பலப்படுத்தி தமிழ்மக்கள் மீதான போரை மீண்டும் முடுக்கி விடுவதற்காகச் சமாதான காலத்தில் இரட்டைவேடம் போட்டு காலம் கடத்துகிறது.

அன்றாட மற்றும் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடைபெற்ற ஆறுகட்டப் பேச்சுக்களின் போதும் அரசு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை. ஏற்றுக் கொண்ட அரைகுறையான விடயங்களைக் கூட அரசு நடைமுறைப்படுத்தவில்லை. இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளின் முன்னேற்பாடாக தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனை அரசினால் கருத்திலெடுக்கப்படாது கைவிடப்பட்டது.

சுனாமிப் பேரலையினால் அழிவுண்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கென உருவாக்கப்பட்ட சுனாமி பொதுக்கட்டமைப்பும் பேரினவாதிகளின் கூக்குரலாலும் ஒற்றையாட்சி அரசியலமைப்பினாலும் குப்பையில் வீசப்பட்டது. அதிகார வெறிபிடித்த பேரினவாதிகளுக்கு சிங்கள ஆளும் வர்க்கம் பௌத்த பேரினவாத சிந்தனையைத் தமது அதிகாரம் ஏறும் தந்திரோபாயமாகப் பயன்படுத்திச் சிங்கள மக்களை ஏமாற்றி தமிழ்மக்களை அழிவுக்குள் தள்ளுகின்றனர். எமது இனப்பிணக்கிற்கு ஒரு உருப்படியான நிரந்தரத் தீர்வைச் சிங்கள தேசம் வழங்கும் என்ற நம்பிக்கைகளை முழுமையாக தமிழ்மக்களாகிய நாம் இழந்து விட்டோம். சமாதான காலத்தில் உரிமைக்கான எமது வேண்டுதல்கள் பாலைவனத்தில் கூக்குரலாகவே ஆகியுள்ளது. எமது உரிமைக்கான குரல்கள் புறக்குடத்தில் வார்த்த நீராகி விட்டது.

எமது உரிமைக்கான குரல்களை சிங்கள பௌத்த பேரினவாதிகளினால் அலட்சியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசு பேச்சுமூலம் எமது உரிமைகளை வழங்க விரும்பாத நிலையில் அரசு மீண்டும் போரைத் தொடங்கி தமிழ் மக்களை அழிக்கத் தயாராகின்ற நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் பேச்சுமூலம் எமது இனப்பிணக்கைத் தீர்ப்பதற்கு இன்னமும் முயற்சிக்கின்ற நிலையில் ஐரோப்பிய யூனியன் புலிகள் மீது விதித்துள்ள தடை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது. மிகவும் வேதனையளிக்கின்றது. மிகுந்த கவலை அளிக்கின்றது.

ஐரேப்பிய யூனியனின் மனிதாபிமானமற்ற நீதி நியாயமற்ற பக்கச்சார்பான இந்த நிலைபாட்டினை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பேச்சுமூலம் எமது உரிமைகளைத் தர மறுத்து போரில் நாட்டங் கொண்டுள்ள அரசிற்கு உந்துசக்தியளிக்கும் வகையிலேயே ஐரோப்பிய யூனியனின் தீர்ப்பு அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு மேற்கொண்டு வந்த அரச பயங்கரவாத செயற்பாடுகளை அதியுச்ச ஜனநாயகச் செயற்பாடாக ஐரோப்பிய யூனியன் கருதுவதாகவே இந்தத் தீர்ப்பு காட்டுகின்றது. ஐரோப்பிய யூனியன் புலிகளைத் தடைசெய்ததன் மூலம் இதுவரை காலத்தில் சிங்கள அரசு 80000 வரையிலான அப்பாவிப் பொதுமக்களைச் சித்திரவதை செய்து கொன்று குவித்துள்ளமைக்கும் பல ஆயிரம் தமிழ்ப்பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்தமைக்கும் பல கோடி ரூபா பெறுமதியுள்ள தமிழ் மக்களின் சொத்துக்களை அழித்து நாசமாக்கியதற்கும் கொடுத்துள்ள நற்சாட்சிப் பத்திர மாகும்.

அரச பயங்கரவாதத்திற்கு ஐரோப்பிய யூனியன் வழங்கியுள்ள அங்கீகாரத்தை ஐரோப்பிய யூனியனின் பார்வையில் அரச பயங்கரவாதமும் ஜனநாயகமும் சமாந்தர அர்த் தமுள்ளதாகக் கருதுவதாகத் தெரி கின்றது. தமிழ் மக்களின் உரிமைக்காகவும் பாதுகாப்புக்காகவும் விடுதலைக்காகவும் போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான இந்தத் தடை அரசின் தமிழின அழிப்புச் செயல்பாட்டிற்கு ஆதரவளிக்கின்ற செயற்பாடாகும்.

ஐரோப்பிய யூனியனின் இந்த ஒரு தலைப்பட்சமான மனிதநேயமற்ற முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு தாழ்மையுடன் கோருகின்றோம் இந்த உலகில் ஏனைய பல இனங்களைப் போலவே பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களுடன் கலாசாரப் மொழி விழுமியங்களுடன் தனித் தேசிய இனமாக வாழ்கின்ற எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினை அங்கீகரிக்குமாறு ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட அனைத்துச் சர்வதேச நாடுகளையும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

திணிக்கப்படுகின்ற யுத்தத்தை தமிழ் மக்களாகிய நாங்கள் எமது இருப்பிற்காக, வாழ்வுரிமைக்காக தகுந்த முறையில் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். திணிக்கப்படும் யுத்தத்தை எதிர்கொள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் தயாராக உள்ளோம். இருப்பினும் அரசு சர்வதேச் அழுத்தத்தின் காரணமாகவாவது பேச்சுக்களுக்களூடாக உருப்படியான தீர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாயின் அதில் பங்குகொண்டு அதனைப் பரிசீலிக்க இன்னமும் தமிழ் மக்களாகிய நாங்கள் தயாராகவே இருக்கின் றோம்.

அவ்வாறில்லாமல் அரசு பேச்சு முயற்சிகளைக் கைவிட்டு போரின் மூலம் தமிழ் மக்களை முற்றாக அழித்து இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்க்க முயன்றால் அது பேரழிவுக்கு வழிவகுக்கும் என்பதுடன் நாம் அதனை எதிர்கொள்கின்ற விதம் எமக்கு தமிழீழத் தனியரசைப் பெற்றுத்தரும் எனவும் நம்புகின்றோம். (ற-04,101,122,19,124)

## தமிழினம் தனது தலைவிதியை தானே தீர்மானிக்கத் தயாராகி விட்டது

### -கஜேந்திரகுமார் எம்.பி

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் இருக்கும்வரை தமிழீழத் தேசிய ஆன்மாவை அழிக்க முடியாது.

தமிழர் தாயகத்தின் விடுதலைப் போராட்டம் விடியலை நெருங்கும் காலகட்டத்தில் தமிழ்த் தேசிய இனம் தமது பலத்தில், தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கத் தயாராகி விட்டது என்பதை யாழ்.மண்ணிலிருந்து அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரிவிக்கவே நாம் இங்கு கூடியுள்ளோம்.

இன்றைய தினம் தமிழர் வாழ்வின் திருநாள்.அலையாக வந்து கடலெனத் திரண்டு நிற்கும் தமிழ் வெள்ளம் பொறு மையின் எல்லையில் நாம் நிற்கிறோம். பொங்கி எழுந்து நிற்கும் எமது உணர்வு களை உலகமே புரிந்து கொள்! எனக் கூறி நிற்கிறோம்.

நிச்சயமாக இம் முழக்கம் காற்றோடு கலந்து உலகின் காதுகளை எட்டட்டும். உண்மையை உலகம் புரிந்துகொள்ளட்டும்!

தமிழ்த் தேசியப் போராட்டம் தானாக உருவாகவில்லை. உருவாக நிர்ப்பந்திக்கப் பட்டது. தமக்கென தனியரசை வரலாற்றில் கொண்டிருந்தவர்கள் நாம். ஆனால், 1948ஆம் ஆண்டில் இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவருக்கு மாற்றப்பட்டது.

இத் தீவின் சுதந்திரம் சிங்கள இனத்தின் மேலாண்மையை அங்கீகரிப்பதாகவும் தமிழரின் இறைமையை புறந்தள்ளுவதாகவும், நசுக்குவதாகவும் அமைந்தது.

இந்நிலையில் தமிழர்கள் தமது இறைமையை நிலை நிறுத்துவதற்காக போராட்டத்தில் குதித்தனர். ஒரு நாட்டின் இறைமை என்பது நாட்டு மக்களிடமே உள்ளது. அதைப் போன்றே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு என்பது அந் நாட்டின் அனைத்து மக்களுடனும் மேற்கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

இதுவரையில் நாட்டில் உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் அமைப்பையும் தமிழ் மக்கள் அங்கீகரிக்கவில்லை. ஒருபோதும் நாம் அதனை ஏற்றுக்கொண்டதும் இல்லை.

சிங்கள அரசுகளால் ஆக்கப்பட்ட அரசியல் அமைப்புக்கள் எமது மக்களின் இறைமைகளைக் கொண்டது அல்ல.



நாம் முயற்சிப்பது எல்லாம் எமது தனித்துவத்தை இழக்காது சிங்கள தேசத்துடன் சேர்ந்து வாழவேண்டும்என்பது தான் இவ் விருப்பத்தின் அடிப்படையில் எம்முடைய முன்னைய தமிழ் அரசி யல் தலைவர்கள் தமிழ் மக்களின் இறைமையை பிரதிபலிக்கின்ற, அரசியல் அபிலா ஷைகளை நிறைவேற்ற அரசுடன் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பேச்சு வார்த்தைகளை நடாத்தினர்.

எனினும், அவையெல்லாம் தோல்வியடைந்து தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டனர். எமது அடிப்படை உரிமைகள் ஏறி மிதிக்கப்பட்டன. எல்லா வகையான நிதி களையும் சிங்கள அரசுகள் மேற்கொண்டன.

ஆனால், தமிழ்த்தேசியம் இனம் என்ற ஆன்மாவை சிங்கள அரசால் அழிக்க முடியவில்லை. அதை அழிக்கவும் முடியாது. ஏனெனில் தமிழ் மக்கள் எடுக்கக் கூடிய முடிவுகளை தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய வலுவுள்ள தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைமைத்துவத்தைக் கொண்டு இருக்கிறோம்.

நாங்கள் ஆயுதங்கள் மீது விருப்புக் கொண்டவர்கள் அல்ல. வன்செயல்களில் காதல் கொண்ட இனமும் அல்ல. ஆனால் உரிமைகளின் மீது மோகம் கொண்ட இனம் எமது தமிழ்த் தேசிய இனம் அந்தத் தணி யாத தாகம் எம்மை ஆயுதங்களை எடுக்க வைத்தது. இனிமேலும் பொறுக்கமுடியாது என்ற நிலையில் ஒரு இனம் செய்யக் கூடியது இதுதான்.

எமது மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும் என்று சர்வதேச அழுத்தத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு மிகச் சிறிய பொதுக்கட்டமைப்பைக் கூட சிங்களப் பேரினவாதம் முடக்கியது.

பசித்தவனுக்கு புசிக்கக் கொடுப்பதையே தடுக்கும் சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுமா? என்பதை சர்வதேச சமூகம் சிந்தித்துப் பார்த்து தீர்க்கமான, உறுதியான, இறுதியான முடிவை எடுக்கவேண்டும். (ற-4)

## இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டம் கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.9.30 மணிக்கு தமிழ் அரசுக்கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கிழக்கு மாகாணப் பிரதிநிதிகள் உட்பட 36 பேர் கலந்து கொண்டனர்.

கட்சியின் இடைக்காலத் தலைவராகக் கடமையாற்றிவந்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆய்வு தொடர்பாக வெளிநாட்டில் இருக்க வேண்டியுள்ளதால் அவரது இணக்கப்பாட்டுடன் அவரது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அந்த இடத்திற்கு இரா. சம்பந்தன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் அமைப்பு நிர்வாகக் கட்டமைப்பை விரிவுபடுத்துவது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது சம்பந்தன் தலைமையில் இதற்கான அமைப்புக் குழு நியமிக்கப்பட்டது.

அத்தோடு ஐப்பசி மாத இறுதியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டுவதென்றும் தீமானிக்கப்பட்டது அப்பொதுக் குழுகூட்டத்தில் கட்சியின் மாநாடு நடத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்படுமென கட்சியின் பொதுச்செயலாளரான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (து)

# இன்று ஒரு தகவல்

## வயிற்றுப் பிழைப்பு

"அரசியல்வாதிகளாயினும்,ஆன்மீகவாதிகளாயினும் எல்லா வாதிகளும் வயிற்றுப் பிழைப்புவாதிகள் தான்" என்பது மக்களின் பொதுவானதொரு கருத்ததாக விளங்குகின்றது.

இதற்குக் காரணம் எல்லோருக்கும் பொதுவான வயிற்றுப் பசியைப் போக்கும் பிழைப்பேயாகும். வசதி குறைந்தோர் அன்றாடம் வயிற்றுப்பசியைப் போக்க ஏதாவது தம்மாலியன்றன செய்கின்றனர். வசதியும்,வாய்ப்பும் உடையோர் அன்றாடப் பசியைப் பற்றிக் கவலையில்லாது, தம் எதிர்காலத்திற்கும்,தம்முடன் சேர்ந்தோரின் எதிர்காலத்திற்குமாகப் பதுக்குகின்றனர்.

ஒரு பகுதியினர் ஏராளமாகப் பதுக்குவதனால் இன்னொரு பகுதியினர் இல்லாமையாற் துன்புறுத்துகின்றனர். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை"என்பதும் "எள்ளானாலும் ஏழாகப் பகிர்"என்பதும் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"விருந்து புறத்திருக்க தானுண்ணல் சாவா மருந்தென்னும் வேண்டற்பாற்றன்று என்பதும்

உயிர் வாழ்வதற்கு உறவு எத்துணை அத்தியாவசியமான என்பதை விளங்கவைப்பதாயுள்ளது. எந்த உயிரும் வாழ்வதற்குத் தன் உடம்பைப் பேணுவதற்கு வயிற்றுப் பசியைப் போக்க வேண்டும். ஆனால் இதில் உள்ள பெருந்தொல்லை என்னவென்றால், எமது வயிறானது தினமும் உணவைத் தேடுமேயல்லாது, ஒரேநாளில் பல நாட்களுக்குத் தேவையான உணவைப் பதுக்கி வைக்கமாட்டாது. இந்த வயிற்றுப் பசியால் நன்கு அனுபவப்பட்ட ஒரு புலவர் மனம் வருந்தித் தன் வயிற்றைத் தானே கோபித்து,

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏரென்றால் ஏராய்
இடும்பை கூர் என் வயிறேநான்
உன்னோடு வாழ்தல் அரிது எனப் புலம்புகின்றார்.

ஒருவர் தனக்கும் தன் குடும்பத்திற்கும், உற்றார் உறவினர்க்கும,சமூகத்திற்கும், தன்னைச் சேர்ந்தோர் அனைவருக்கும் பசிவரும் போது அவர்கட்கு வேண்டியதைக் கிடைக்கும் போது தேடிச் சேர்த்துப் பதுக்குவோம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாயுள்ளனர்.

எமது அயலில் ஒரு பெரியவர் ஒருவருக்கும் ஒன்றும் ஈயாதவராயிருப்பது கண்ட ஒரு சிறுவன் "ஏனப்பா? நீங்கள் ஒருவருக்கும் கொடுக்காமல் சிக்கனமாயிருக்கிறீர்கள்? ஏன் கருமித்தனம் பண்ணுகிறீர்கள்?"எனக் கேட்டான்.

அதற்குப் பெரியவர் பையனிடம் நீ சிறியவன் உனக்குப் பொறுப்பில்லை. எல்லாம் இந்த ஒரு சாண் வயிற்றை நிரப்புவதற்கேதான் நாம் படும்பாடெல்லாம் என்றார்.

அப்போது பையன் பெரியவரிடம் கேட்டான் "எல்லாரும் வயிற்றுப்பிழைப்பு,வயிற்றுப்பிழைப்பு என்கிறார்களே அப்படியானால ஆண்டவன் ஏன்? எல்லாருக்கும் வயிற்றையும், வாயையும மட்டும் படைக்காமல் மற்றய உறுப்புகளையும் படைத்தான். 'எல்லாம் அவனுக்கே வெளிச்சம் என்றான்."அது உலகிற் பிறந்த உயிர்களெல்லாம் அண்டவெளியில் முயற்சிசெய்து, தொழில் செய்து தத்தம் உறுப்புக்களை பாவித்துத் தம்மைத் தாம் வளர்க்க வேண்டும். அன்றி வாயையும்,வயிற்றையும் பிறர் கவனிப்பார் என்றிருக்கக் கூடாது என்பதை வெளிப்படுத்தவே எல்லா உயிர்கட்கும் அவை அவைக்கேற்ப ஆண்டவன் படைப்பு அமைந்துள்ளது காணலாம் "என்பதைப் பெரியவர் பையனுக்குப் புரியவைத்தார்.

**நீர்வைமணி**

# 2 அமைச்சர்களை நீக்க ஜனாதிபதி தீர்மானம்?

(கொழும்பு)

அமைச்சரவையில் இருந்து மங்கள சமரவீர உள்ளிட்ட இரண்டு அமைச்சர்களை நீக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்துள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது.

அமெரிக்காவில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நாடு திரும்பிய சந்திரிகா தனது அமைச்சரவையினரை சந்தித்துக கலந்துரையாடினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்புக்களின் போது மங்கள சமரவீர உள்ளிட்ட இரண்டு அமைச்சர்களை வெளியேறுமாறு சந்திரிகா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பிக்கும், பிரதமர் மஹிந்தவுக்கும் இடையேயான தேர்தல் புரிநதுணர்வு ஒப்பந்தம் உருவாகக் காரணமாக இருந்தவர் மங்கள சமரவீர என்பதால் இந்த நடவடிக்கையினை ஜனாதிபதி மேற்கொள்ளவுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமைச்சரவையை சந்திரிகா மாற்றி அமைக்கக்கூடும் என்ற செய்திகளை மறுத்த சுதந்திரக் கட்சியினர் முக்கிய அமைசசுப் பொறுப்புக்களான நீதி மற்றும் வெளிவிவகார துறையை சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய அனுரா பண்டாரநாயக்க மற்றும சரத் அமுனுகம வைத்துள்ளதால் அமைச்சரவை மாற்றம் இருக்காது எனவும் தெரிவித்தனர். (த-4)

# பொங்கு தமிழ் உரிமைக் குரல்கள்

## தன்மானத்தோடு வாழ்வதற்குப் போராடுவது பயங்கரவாதமெனில் பெருமையடைகிறோம்

**-ம.ம.மு. தலைவர் பெ.சந்திரசேகரன்**



தமிழர்கள் தன்மானத்தோடு வாழ்வதற்காகப் போராடுவது பயங்கரவாதமெனில் அதற்காக நாம் பெருமைப்படுகிறோம் என மலையக மக்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத நிலையில் தான் இனவாத சிங்கள அரசு யுத்தம் வேண்டாம்-பேச்சு மேசைக்கு வருகிறோம் என அடிபணிந்தது.

இப்போது அங்கே சிங்களப் பேரினவாதிகள் ஒன்றிணைந்திருக்கிறார்கள்.தமிழர்களுக்கு நிலமில்லையாம் ஆயுதங்களைக் கீழ போட வேண்டுமாம். யுத்தத்துக்காகப் பேரினவாதிகள் அங்கே ஒன்று சேர்ந்துள்ளார்கள்.

ஆனால் இங்கே தமிழர் கூடியிருப்பது யுத்தத்திற்காக அல்ல உரிமையோடு வாழவேண்டும் என்பதற்காக.

எனவே ஒடுக்கப்பட்ட இனம் கிளர்ந்தெழுந்திருக்கிறது.அவர்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானித்துக்கொண்டனர் என்பதை உலகம் புரிந்துகொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை.

கொழும்பில் வாழும் தமிழ் மக்களாயிருந்தாலும் சரி மலையகத்தில் வாழும் தமிழர்களாயிருநதாலும் சரி வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாயிருந்தாலும் சரி இவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலை வடக்கு-கிழக்கில் வாழந்த தமிழர்கள் உரிமைக்காக போராடியமையினாலேயே கிடைக்கப்பெற்றது.

எனவே தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல. இன ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டமாகும். தமிழர்களின் விடிவுக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனகிறார்களே அவர்களை நாங்கள் திடமாகச் சொல்கிறோம்.

'100 ஆண்டு காலமாக எங்களை ஒடுக்கியவர்கள் பயங்கரவாதிகளா? அல்லது ஒடுக்கப்பட்ட இனத்திற்காகப் போராடியவர்கள் பயங்கரவாதிகளா? ஆலயங்களில் குண்டு வீசிக் கொன்றவர்கள் பயங்கரவாதிகள் இல்லையா? மதவழிபாட்டுத் தலங்களை அழித்தது பயங்கரவாதம் இல்லையா? செம்மணிப் புதைகுழிகளிலே ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களை கைவேறாக கால் வேறாக கொன்று புதைத்தது பயங்கரவாதம் இல்லையா? இதை எதிர்ப்பவர்கள் பயங்கரவாதிகள் என்றால் நாங்கள் பயங்கரவாதிகளாகவே இருந்துவிட்டுப் போகிறோம்.

எவனுக்கும் அடிபணியாமல் தன்மானத்தோடு வாழ்வது பயங்கவாதம் எனில் நாம் பயங்கவாதியாகவே இருந்துவிட்டுப் போகிறோம்.தொல்லை கொடுப்பவை கிள்ளி எறிவது பயங்கரவாதமாம்.

எங்களுடைய தேசியக் தலைவர் பிரபாகரன் தமிழர் தாயகத்திற்கு மட்டுமல்ல இலங்கைக்கு மட்டுமல்ல உலகத தமிழர்களுக்கே தலைவராகத் திகழ்கிறார்.

தமிழர்களின் இழிவுநிலைக்குக் காரணமே இந்த ஐரோப்பிய சமூகம்தான் தமிழர்களையும் சிங்களவர்களையும் இணைத்தது ஐரோப்பிய சமூகம் எமது இலட்சியத்தை நாம் வென்றெடுப்போம்.

(ற-4)

## தமிழர் உரிமையை வென்றெடுக்க பிரபாவுடன் ஒன்றுபட்டு செயற்படுவோம்

**-மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்**



தமிழ்மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை சிங்கள தேசம் சிங்கள பௌத்த அடிப்படை பேரினவாதம் தொடர்ந்தும் வழங்க மறுத்துக்கொண்டிருக்குமானால் தமிழ்த் தேசிய இனம் சுதந்திரமாக வாழ்வதற்கான சுதந்திரப் பிரகடனத்தை செய்து கொள்வதற்கான எது நிலைக்கு தள்ளப்படும் நிலை ஏற்படும்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதை ஓர் அர்த்தமுள்ள சுதந்திரமான உரிமையுடன் தங்களைத் தாங்களே ஆள்வதற்கான ஒரு கட்டமைப்பாகவே தமிழ் மக்கள் எதிர்பார்கின்றார்கள். அந்த அர்த்தமுள்ள சுயநிர்ணய உரிமைக்கே சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களையும் அவர்களின் பாதுகாவலர்களையும் தள்ளிக்கொண்டு வருகின்றது.

தமிழ்மக்கள் பாரம்பரியமாக ஒரு பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால் அது அவர்களது உள்ளக சுயநிர்ணய உரிமையையே குறிக்கின்றது.

சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று தமிழ்மக்கள் முடிவெடுப்பார்களாயின் அது அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு முன்னர் இடைக்காலத் தன்னாட்சி உரிமையை ஏற்படுத்த விரும்புவார்களாயின அது அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அதே போன்று ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள மக்களுடன் ஒன்றுபட்டு கூட்டாட்சி முறையின் கீழே சமஷ்டி அமைப்பில் ஒன்று பட்டு வாழ்வோம் என்று முடிவெடுப்போமாயின் அது உள்ளக சுயநிர்ணய உரிமை. ஆனால சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று இவையனைத்தையும் நிராகரித்துள்ளது.

ஆகவே, தமிழ்மக்கள் தமது உள்ளக சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தமது சுதந்திரத்தைத் தீர்மானிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கின்றார்கள்.

இன்று சிங்கள தேசத்தின் தலைநகரிலேயே சிங்களக் கட்சிகள்,பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகள் அனைத்தும் ஒன்றுபட்டுள்ளன. சுதந்திரக் கட்சி,ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி,ஜாதிகஹெல உறுமய என கட்சிகளின் பெயர்கள் வேறுபட்டாலும் அவற்றின் செயற்பாடுகள் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதாகவேயுள்ளன.

அவசரகாலச் சட்டத்தை அனைத்துக் கட்சிகளும ஆதரித்ததன் மூலம் இதன்ன தமிழ்மக்கள் நன்கு புரிந்துகொள்ளமுடியும். அவர்கள் அன்றைய நிலைப்பாட்டிலேயே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.இதனை தமிழ் பேசும் அனைத்து சக்திகளும் ஒன்றுபட்டு உலகுக்குக் காட்டியுள்ள நிலையில் சர்வதேச சமூகம் மௌனமாக இருக்க முடியாது.

நான் மீண்டும் ஒன்றைக் கூறுகின்றேன் சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களின் உரிமைகளை தர மறுக்குமானால தமிழ் மக்கள் தமது உள்ளக சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தமது சுதந்திரத்தைத் தாமே தீர்மானிப்பார்கள் இதற்காகத்தான் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் இதனைத் தொடர்ந்து இன்று யாழ்ப்பாணத்தில் தமது சுதந்திர வேட்கையை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறான உரிமைப் பிரகடனத்துக்கு தொடர்ந்தும் மேல்மாகாண மக்கள் முன்னணி தமிழீழத் தேசியத் தலைவருடன் ஒன்றுபட்டு ஒரே குரலில் குரல் கொடுக்கும்

(ற-8)

## ஐக்கிய நாடுகள் சபையில் புலிக்கொடி பறக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை

**-எம்.கே.சிவாஜிலிங்கம்**

நாங்கள் ஒரு தமிழ்த்தேசிய இனம். ஒரு தேசிய இனததுக்குரிய அத்தனை அம்சங்களையும் கொண்டிருக்கின்ற காரணத்தினால் நாங்கள் தேசிய இனமாக நிமிர்ந்து நிற்கின்ற காரணத்தினால் எங்களுக்கென்று ஒரு தனிநாட்டை அமைப்பதற்குப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. இந்நிலையில் ஒரு மனிதனுக்கு இருக்கின்ற பிறப்புரிமைகூட அந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே பிரிந்து சென்று தமிழரசினை அமைக்கக்கூடிய ஒரு நிலைமையை சர்வதேசம் அங்கீகரித்திருக்கின்ற அந்த சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையிலேயே நாங்கள் இன்றைய ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வுக்கு தயார் என்று கூறி கடந்த 3ஆண்டுகளாக ஒரு சமாதானத் தீர்வை நாங்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

இன்றைக்கு சிங்கள தேசம் தமிழருக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலினை சாட்டாகக் கொண்டு பெரும் வியூகத்தை வகுத்துள்ளது.


தமிழருக்கு ஒற்றையாட்சியின் கீழ்தான் நிரந்தரத தீர்வென்று தற்போதைய பிரதமர் கடும் கோட்பாடுடைய ஜே.வி.பியுடன் சேர்ந்துகொண்டு கூறியுள்ளார்.

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒற்றை யாட்சி முறையை பிரதமர் அங்கீகரித்திருக்கின்றார் எனில் அவரால் எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பது தெட்டத்தெளிவு.

இந்நிலைப்பாட்டால் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு தயார் என அறிவித்திருந்த பிரதமருக்கு பிரபாகரனின் முகத்தைப் பார்க்கக்கூட தகுதியில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தனியரசினை அமைக்கக்கூடிய உரிமையினைக் கொண்டுள்ளனர். அவ்வுரிமையை நிச்சயமாக சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும். அங்கிகரீக்கின்ற நாள் வெகு தொலைவில் இல்லை.

தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் ஒன்று திரண்டுள்ள தமிழ்த் தேசிய இனத்தின் புலிக்கொடி ஐக்கிய நாடுகளின் சபையில் பறக்கின்ற நாள் வெகு தொலைவில் இல்லை. (ற-4)



# உலகம் சுற்றும் தமிழ் படம்

தமிழ் காமராஜ் திரைப்படம் இப்போது உலக நாடுகளுக்கு செல்வதற்காக ஆங்கிலம் பேசும் 'தி கிங் மேக்கர்' ஆகியிருக்கிறது. இதில் காமராஜர் முதல் அவரது தாயார் வரை அனைவரும் ஆங்கிலம் பேசுகிறார்கள். தமிழ் படத்தில் இடம் பெறாத சில புதிய காட்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதற்கான பாராட்டு விழாவில், காமராஜராக நடித்த ரிச்சர்ட் மதுரம் டைரக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோரை ஜி.கே.வாசன், காமராஜரின் உதவியாளர் வைரவன், வி.என்.சிதம்பரம், எஸ்.பி.முத்துராமன் ஆகியோர் பாராட்டினார்கள். நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

# மம்முட்டி படத்தில் சினேகா– திரிஷா

மம்முட்டி தோறுபு சவுழன் என்ற மலையாள படத்தில் நடிக்கவுள்ளார். இதில் அவருக்கு ஜோடியாக நடிக்கும்படி திரிஷா, சினேகா இருவருக்குமே அழைப்பு வந்துள்ளது. இவர்களில் யார் நடிக்கப் போகிறார் என்பது தெரியவில்லை. இது காமெடி மற்றும் ஆக்சன் கலந்த படம்.

# விஜய்யை காக்க வைத்த ந...

'பிப்ரவரி – 14' படத்திற்கான பாடல் கேசட் வெ...
யில் நடைபெற்றது. விழாவுக்கு வரவிருந்த நடிகை ந...
தில் வராமல் விஜய்யை சுமார் முக்கால் மணி நேரம்...
விட்டதால் அவர் மிகவும் நொந்து போய் விட்டாராம்.

# விவேக்கின் ஆத...

'சொல்லியடிப்பேன்' என்ற படத்தில் விவே...
நடித்து வருவது தெரிந்த செய்தி. அவர் தொடர்ந்து...
கதாநாயகனாக நடித்து வருவதால் இனி நக...
நடிக்க மாட்டார் என்ற புரளியைக் கிளப்பி விடுகி...

இதெல்லாம் என் வளர்ச்சியைத் தடுப்பதற்...
என்று சுஹறிவருகிறார் விவேக்.

# விஜய டி.ராஜேந்தர் இயக்கும் வீராசாமி படத்துவக்க விழா

விஜய டி.ராஜேந்தர் நடித்து இயக்கும் 'வீராசாமி' படத்துவக்க விழா நடைபெற்றது.


குறள் டி.வி மற்றும் சிம்பு சினி ஆர்ட்ஸ் சார்பில் தயாராகும் புதிய படம் 'வீராசாமி' இப்படத்தை விஜய டி.ராஜேந்தர் நடித்து இயக்குகிறார். இருவடன் மும்தாஜ் புதுமுகங்கள் அஜீஸ், மேகனா நாயுடு, தர்ஷினி மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கதை,வசனம்,ஒளிப்பதிவு தயாரிப்பு, டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுள்ளார் விஜய டி.ராஜேந்தர். வீராசாமி படத்தின் துவக்க விழாவும் விஜய டி.ராநேந்தரின் வெள்ளி விழா ஆண்டு விழாவும் சென்னை வடபழனி பத்மாராம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

துவக்க விழாவில் நடிகர் சிம்பு குத்து விளக்கேற்றி வைத்தார். விழாவில் டைரக்டர்கள் எஸ்.கே.சூர்யா, கே.ஆர், நடிகைகள் மும்தாஜ், மேகனா நாயுடு, நடிகர் அஜீஸ் பட அதிபர்கள் இப்ராகீம் ராவுத்தர், தாணு கே.ராஜன், விநியோகஸ்தர்கள், சங்கத்தலைவர் அருள்பதி, ஜி சேகரன், சிந்தாமணி முருகேசன், அமுதா துரைராஜ் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விழாவில் விஜய டி.ராஜேந்தர் பேசுகையில் தன்மான தமிழுக்காக ஒரு தமிழன் எடுக்கும் படம் வீராசாமி. இங்கே பேசியவர்கள் மும்பையிலிருந்து தமிழுக்கும் நடிகைகளை அறிமும் செய்கிறார் என்று நான் அறிமுகப்படுத்திய மும்தாஜ் இன்று நல்ல தமிழ் பேசுகிறார் தமிழ் பேச வைக்கிற அளவுக்கு உருவாக்கி வைத்திருக்கும் பெருமை என்னைச் சேரம்.

நான் என்றைக்கும் மன்மதன் வீரநடை போடுபவன் நான் வீராசாமி வீரத் தமிழன் தான் இந்த வீராசாமி குறள் டி.வி என்ற பெயரை பார்த்த பலர் பேசினார்கள். குறள் டி.வி மூலம் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து தொலைக்காட்சிகளுக்குக் கொடுக்க இருக்கிறேன் குறள் டி.வி கார்பரேட் கம்பெனியாகச் செயல்படும். இவ்வாறு அவர் கூறினார். வீராசாமி படத்தின் படப்பிடிப்பை நடிகர் சிம்பு தொடக்கி வைத்தார்.






# என் கண்களே எனக்கு அழகு

## – திரிஷா



தமிழ், தெலுங்கு பட உலக ரசிகர்களை அப்படியே வாரிச் சுருட்டி தன் பக்கம் வைத்திருக்கும் திரிஷா. இந்த இடத்தைப் பிடித்தது எப்படி? அவரது அழகுக்கு அழகு சேர்ப்பது என்ன...? இதோ சொல்கிறார்...

நான் அனைவரையும் என் நண்பர்களாக கருதுகிறேன். நட்புடன் பழகுகிறேன். என்னிடம் பிடிவாத குணம் உண்டு. என்றாலும் என் நண்பர்கள் என்னிடம் உண்மையான நட்புடன் பழகும் விதத்தில் நான் நடந்து கொள்கிறேன்.

படிக்கும் காலத்தில் மனோதத்துவ நிபுணராக வரவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் நடிகை ஆகிவிட்டேன். சினிமாவிலாவது மனோதத்துவ நிபுணராக நடிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தமிழில் சுமார் 10 படங்களில் நடித்து இருக்கிறேன். எல்லாப் படங்களுமே என்னைப் பொறுத்தவரை நல்ல படங்கள்தான். என்றாலும் 'சாமி' படம்தான் எனக்கு மறக்க முடியாத திருப்பு முனையாக அமைந்தது.

தென் மாநிலங்களில் உள்ள முக்கிய நாயகர்கள் அனைவருடனும் நடித்துவிட்டேன். ரஜினி கமல் ஆகியோருடனும் நடித்துவிட்டால் அது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமையாகக் கருதி மகிழ்வேன்.

தமிழில் ரஜினி கமலை எனக்கு மிகவும் பிடிக்கும். நடிகைகளில் சிம்ரனைப் பிடிக்கும். ஹிந்தியில் சல்மான்கான், ராணிமுகர்ஜி எனக்குப் பிடித்தவர்கள் ஹாலிவுட்டில் டாம் குரூஸ் மெல்கிப்சன் ஜூலியா ராபர்ட் ஏஞ்சலினா ஜூலி ஆகியோரைப் பிடிக்கும்.

நான் நடித்த படங்கள் எல்லாமே எனக்கு நல்ல அனுபவமாக அமைந்துள்ளன. நல்ல படங்களில் நடித்து திரிஷா நல்ல நடிகை என்ற பெயரை வாங்க வேண்டும் என்று விரும்புகிறேன். அந்த இலட்சியத்துடன் தான் உழைக்கிறேன்.

எனது உடலில் அழகான உறுப்பு எது என்று சிலர் கேட்கிறார்கள். அதற்கு நான் எந்தப் பதிலும் சொல்வது இல்லை. ஆனால் என் நண்பர்கள் என்னுடைய கண்கள் தான் அழகாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அழகு என்பது அதைப் பார்ப்பவர்களின் கண்களில்தான் இருக்கிறது என்கிறார் திரிஷா.

# ஆவேச அகர்வால்

சோனியா அகர்வால் மிகவும் அமைதியானவர் என்று சினிமா துறை வ... ம் கூறுகிறது. படப்பிடிப்புக்கு தனியாகத்தா... கிறார். அரிசி சாப்பாடு இவருக்குப் பிடிக்க...

பிடித்த உணவுகள் நா... சப்பாத்தி, ரொட்டி, ஜூஸ். படப்பிடிப்பு... தில் எல்லோரிடமும் கல கலப்பாக பே... கிறா...

ஆனால் கோபம் வந்து... ரிடம் தாக்குப்பிடிக்க முடியாது. கையி... கிடைப்ப... லாம் ஆவேசமாக தூக்கி அ... கள். இவருடைய உதவியாளர்கள் ப... எதிர்கால கணவர் என்ன பாடுபடப்போகிறாரோ?

# அருண்குமாரின் துணிச்சல்

அருண்குமார் இப்போது 'துணிச்சல்' என்ற படத்தில் நடித்து வருகிறார். அடுத்து சேரன் தயாரிக்கும் ஒரு படத்திலும் அர்ஜுன் தயாரிக்கும் இன்னொரு படத்திலும் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார்.

# நாட்டியக் குடும்பம்

நடிகை தியா கலாசேத்ராவில் நாட்டியம் பயின்றவர் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இது போல அவரது 2 சகோதரிகள், அம்மா, பாட்டி அனை... வருமே நாட்டியம் பயின்ற மாமணிகள் தான்.

# சின்னத்திரையில் விந்தியா

'சங்கமம்' படத்தின் மூலம் அறிமுகமான விந்தியா... பெரிய திரையில் போதிய வாய்ப்புக் கிடைக்காததால்... விரைவில் சின்னத்திரைப் பக்கம் செல்லவிருக்கிறார்.

*காக்கி படத்துக்காக மொட்டை போட்டுள்ள சரத்கும... விழாக்களுக்குப் போகும் போது 'விக்' வைத்து... கொள்கிறார்*

## ாக்க வைத்த நயன்தாரா

திற்கான பாடல் கேசட் வெளியீட்டு விழா அண்மை
வுக்கு வரவிருந்த நடிகை நயன்தாரா குறித்த நேரத்
சுமார் முக்கால் மணி நேரம் வரை காக்க வைத்து
நொந்து போய் விட்டாராம்.

## க்கின் ஆதங்கம்

ன்' என்ற படத்தில் விவேக் கதாநாயகனாக
செய்தி. அவர் தொடர்ந்து ஒரு சில படங்களில்
து வருவதால் இனி நகைச்சுவை கரக்டரில்
ரளியைக் கிளப்பி விடுகிறார்கள்.
வளர்ச்சியைத் தடுப்பதற்காக நடத்தப்படும் சதி
விவேக்.



மதராஸி படத்தைத் தயாரித்து வரும் சுபா சந்தீப் தொடர்ந்து தமிழில் 6 படங்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.




## சினிமாச் சிதறல்

## அகர்வால்

ால் மிகவும் அமைதியா
றை வ... ம் கூறுகிறது.
கத்தா... கிறார். அரிசி
பிடிக்க...
... நா... சப்பாத்தி,
...ல் எல்லோ
... பே... கிறா...
து... ரிடம் தாக்
கையி... கிடைப்ப...
க்கி அ...
ியாளர்கள் ப...
ன பாடுபடப்போகிறாரோ?

## ரின் துணிச்சல்

போது 'துணிச்சல்' என்ற
ார். அடுத்து சேரன் தயா
ம் அர்ஜுன் தயாரிக்கும்
ம் கதாநாயகனாக நடிக்க

## க் குடும்பம்

சேத்ராவில் நாட்டியம் பயின்
லோருக்கும் தெரியும். இது
ரிகள், அம்மா, பாட்டி அனை
ற மாமணிகள் தான்.


## யில் விந்தியா

லம் அறிமுகமான விந்தியா
வாய்ப்புக் கிடைக்காததால்
ப்பக்கம் செல்லவிருக்கிறார்.

*மொட்டை போட்டுள்ள சரத்குமார்*
*ாகும் போது 'விக்' வைத்துக்*
*காள்கிறார்*

## சாணக்யா

### திரை விமர்சனம்



சாணக்யா
சரத்குமார்-லயா

தவறு செய்பவர்கள் எவ்வளவுபெரிய பதவியில் இருந்தாலும் அவர்களையும் அறிவுலகத்தால் ஒரு சாமானியன் வெல்ல முடியும் என்பதைச் சொல்லும் கதை.

ஆட்டோ கணேசன், விளம்பர பிரியன் தன்னைப் பிரபலப்படுத்துவதற்காக எதையும் செய்வான். செய்யாத குற்றங்களை... கூடத் தானே செய்ததாகச் சொல்கிறான். இதனால் பொலிஸாருக்குத் தலைவலி ஏற்படுகிறது.

பொலிஸாரின் கவனம் திசை திரும்பியதைச் சாதகமாக எடுத்துக் கொண்டு இளம் வயதில் தனது தாய், தந்தையையும் குடும்பத்தினரையும் கொன்று குவித்த மூன்று உயர் அதிகாரிகளின் உயிருக்கு குறிவைக்கிறான்.

ஆட்டோ கணேசனாக சரத்குமார். இவர் ஆட்டோ டிரைவராக வந்து வடிவேலுடன் சேர்ந்து அடிக்கும் லூட்டிகள், சேட்டைகள், 'கலகல' தொழில், அதிபரை கடத்திக் கொலை செய்வதாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துவிட்டுத் தப்பும் சாகசம் திரில்.

சி.பி.ஐ கெடுபிடிக்குப் பயந்து ஆஸ்பத்திரியில் படுத்துக்கொண்டு 'அபிட்டம்' கேட்கும் மந்திரியின் கதையை முடிப்பதும் பொலிஸ் அதிகாரியின் கையால் கலெக்டரின் கணக்கை முடித்து வைப்பதும் வித்தியாசமான சிந்தனை.

20 அரிவாள்களுடன் வருபவர்களை எதிர்கொள்வது திகில். விதவிதமான சண்டைக் காட்சிகளில் ரகம் ரகமாக ரசிகர்களுக்கு விருந்து படைத்து பலசாலி என்பதை நிரூபிக்கிறார் சரத். நமீதாவிடம் காட்டுவது நெருக்கம்.



'தருவியா... தரமாட்டியா...' என்று சொந்தக் குரலில் பாடி அசத்தியிருக்கிறார். படம் முழுவதும் நிறைந்து கதைக்கு விறுவிறுப்பு ஏற்றுகிறார். தந்தையாகவும் வந்து உருக வைத்திருக்கிறார். மறக்க முடியாத பாத்திரம்.

பொலிஸ் வேடத்தில் வரும் லயாவும் நயமான நடிப்பை கொடுத்திருக்கிறார். வடிவேலு சரத்துடன் சேர்ந்து காமெடியில் கொடிகட்டிப் பறக்கிறார். 'சூட்டிங்' பார்க்கப்போவது, சண்டைக் காட்சிக்கு ஆட்டோவை கொண்டு போய் அவதிப்படுவது. உதவி செய்யும் மயில்சாமியிடம் சிக்கித் தவிப்பது எல்லாமே நினைத்துப் பார்த்துச் சிரிக்கும் ரகம்.

சலீம்கோஷ், வி.எம்.சி.ஹனீபா, இளவரசு, வின்சென்ட் அசோகன், டெலிபோன்ராஜ் எல்லோருமே கதையின் பாத்திரங்களாகவே மாறியிருக்கிறார்கள். சரத்குமாரின் வேகத்துக்கும் சுறுசுறுப்புக்கும் ஏற்றவாறு கதையைச் சொல்லி அக்ஷனுடன் புதுப்புது யுக்திகளையும் கலந்திருக்கும் டைரக்டர் ஏ.வெங்கடேஷ் திறமைக்கு சபாஷ். உச்சக்கட்ட காட்சியில் பொலிஸ் அதிகாரியின் இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்து அவனைப் பதற வைக்கும் போது ரசிகர்களின் இதயங்களின் படபடப்பையும் அதிகரிக்கச் செய்து இயக்குனர் அவரது சாணக்கியத்தால் வெற்றி பெற்றிருக்கிறார்.

விறுவிறுப்பான திரைக்கதையும் அனைத்துரசிகர்களின் ரசனையையும் திருப்தி படுத்தும் வகையில் கலந்திருக்கும் மசாலா கச்சிதம் 'கரு' பழையது என்றாலும் 'உரு' புதியது.


ஸ்ரீகாந்த்தேவாவின் துள்ளல் இசை ஐந்து பாடல்களையும் ரசிக்க வைக்கிறது. பின்னணி பேசுகிறது. மது அம்பாட் கமராவும் கதை சொல்கிறது. பஞ்சு அருணாசலத்தின் கதைக்கு சுபா வசனம் கச்சிதம். சூப்பர் சுப்பராஜன் அமைத்துள்ள சண்டைக் காட்சிகள் சரத் ரசிகர்களுக்குப் புதிய அனுபவம்.

**சாணக்யா – சரத்குமாருக்கு கிடைத்துள்ள மற்றுமொரு மகுடம்**

## பி.வாசு இயக்கத்தில் அஜித் நடிக்கும் பரமசிவன்

'வேலை கிடைச்சாச்சு', 'சின்னத்தம்பி', 'வால்டர் வெற்றிவேல்', 'நடிகன்', 'மன்னன்' போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் பி.வாசு.

சமீபத்தில் ரஜினிகாந்த் நடித்து அவர் இயக்கிய 'சந்திரமுகி' இந்திய சினிமாத் துறையில் வசூல் சாதனை படைத்துள்ளது.




இந்தப் படத்தை அடுத்து பி.வாசு சாம்ராட் பிலிம் கார் பரேஷன் என்ற புதிய நிறுவனத்தின் படத்தை இயக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார். இப்படத்திற்கு பரமசிவன் என்று பெயர் சூட்டியுள்ளார்.

இதில் அஜித்குமார் நாயகான நடிக்கிறார். அதிரடி டைரடக்டர் பி.வாசுவும் அதிரடி மன்னன் அஜித்தும் இப்படம் மூலம் ஒன்று சேருகிறார்கள்.

அஜித்குமார் ஜோடியாக லைலா நடிக்கிறார். இவர் வெற்றி பெற்ற 'தீனா' படத்திற்குப் பிறகு அஜித்துடன் இணைகிறார். மேலும் பிரகாஷ் ராஜ். விவேக் சந்திரமுகி அவிநாஷ் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் பி.வாசு.

இசை: வித்யாசாகர், ஒளிப்பதிவு சேகர் வி.ஜோசப், எடிட்டிங் சுரேஷ் அர்ஸ், தயாரிப்பு: சாம்ராட் பிலிம் கார்பரேஷன்.



'பாரிஜாதம்'
பிருத்விராஜ் - சரண்யா

# விழிப்பின் பதிவுகள்

வலம்புரி

## தவிக்கின்ற பொது மக்களும் தண்டிக்கப்பட வேண்டிய அரசியல்வாதிகளும்



இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீட்டெடுக்க, அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்க முட்டுக்கட்டையாக இருப்பது இலங்கையின் அரசியல் முரண்பாடுகளே என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும் தற்போது சுனாமி புனர்வாழ்வு சர்வதேச குழுவில் அங்கம் வகிக்கின்றவருமான பில் கிளின்டன் தெரிவித்திருப்பது இலங்கை அரசாங்கத்தின் பொதுமக்கள் மீதான அலட்சியத்திற்கு கிடைத்திருக்கின்ற ஒரு மரண அடியாகும். குறிப்பாக வட கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு பாரிய அளவில் உதவும் என நம்பப்பட்ட சுனாமி அதிகார சபை உயர்நீதிமன்றத்தால் முடக்கப்பட்டமையானது நிவாரண புனர்வாழ்வு செயற்பாடுகளை பாதித்திருப்பதாக கிளின்டன் வெளிப்படையாக தெரிவித்திருக்கின்றமையானது தொடர்ந்தும் நாட்டு நிலைமையை உலகத்திற்கு திரித்து காட்டும் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த பாரிய தோல்வியாகும். அத்தோடு தொடர்ந்தும் இவ்வாறு உலகத்தை ஏமாற்ற முடியாது என்பதை இது எடுத்து காட்டுகிறது.

இலங்கையின் 1585 கிலோ மீற்றர் நீளமான கரையோர பகுதியில் 985 கிலோ மீற்றர் கரையோர பகுதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்டன. இதனால் 40,000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததுடன் 234,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன என அரசாங்க தகவல்கள் கூறுகின்றன.

தற்போது இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களில் சுமார் ஆறு இலட்சம் வரையான இடம்பெயர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல், குடியிருப்புகள் இல்லாமல் பெரும் துன்பத்தில் உழலுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வெப்பத்தில் தவிக்கின்ற தற்காலிக கூடாரங்களில் வசிக்கிறார்கள்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 9 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் இன்னும் குடியமர்த்தப்படவில்லை. தெற்கில் மட்டும் அரசாங்கம் பல அபிவிருத்திகளை மேற் கொண்டிருந்தது. இது தவிர பொதுமக்கள், தமது முயற்சியாலும் அரசசார்பற்ற உதவி நிறுவனங்களின் உதவியோடும் வீடுகளை புணரமைத்துள்ளனர். இது சுனாமியால் பாதிக்கப்பட்ட மொத்த வீடுகளில் 2 வீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது 98 வீதமான அழிவுற்ற வீடுகள் கட்டியெழுப்பப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். சுனாமியனர்த்தம் ஏற்பட்டு 9 மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் இத்தகைய சூழல் காணப்படுவது மிகவும் மோசமான நிலையாகும். இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளுமே.

சுனாமி அனர்த்தத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வடகிழக்கினை கட்டியெழுப்புவதற்கான சுனாமி அதிகாரசபை பெரும் இழுபறிகளுக்கு மத்தியிலேயே முன் வைக்கப்பட்டது. உடனடியாக செயற்பட வேண்டிய விடயத்தினை மாதக்கணக்கில் இழுத்தடித்து மக்கள் துன்பத்தில் வதங்கிக் கொண்டிருந்த நேரத்தில் காலதாமதமாக இச்சபை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இதற்கு எதிராக ஜே.வி.பி கட்சியும், ஹெல உறுமய கட்சியும், சில முஸ்லிம் அமைப்புக்களும் காட்டிய எதிர்ப்பினால் சபை செயலிழக்கும் நிலை ஏற்பட்டது. இறுதியாக ஜே.வி.பி தொடுத்த வழக்கானது இச்சபையை கர்ப்பத்திலேயே கலைத்துவிட்டது.

இதன் விளைவு பாதிக்கப்பட்ட மக்கள் துயரமான வாழ்வையே நடத்துகிறார்கள். வெப்பத்திலும், மழையிலும் பல்வேறு நோய்களாலும் பாதிக்கப்படுகின்றனர். அதிகமாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொழில் இழந்து அகதி முகாம்களில் அடைக்கலமாகியிருக்கின்றனர். குழந்தைகள் தமது கல்வியை தொடரமுடியாது உள்ளனர். பெண்கள் பொது இடங்களில் வாழ்வதால் இன்னோரன்ன துயரங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

சர்வதேச சமூகம் அள்ளிக்கொடுக்க முன் வந்தும் அரசியல் வாதிகளும், அரசாங்கமும் தமது சுயநலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிள்ளிக் கொடுக்கக்கூட முன்வரவில்லை.

ஏற்கனவே வடகிழக்கில் போரால் மக்கள் பாதிக்கப்பட்டு பெருமளவில் அகதிகளாக இருக்கின்ற சூழலில் இந்த சுனாமியினால் பாதிக்கப்பட்ட அகதி மக்களும் சேர்ந்துள்ளனர். இது மிகப் பெரும் தொகையாகும். எனினும் இம்மக்களுக்கு விடிவைத்தர எவரும் முன்வரவில்லை.

- என். ஜீவேந்திரன்

இத்தகைய துயர சூழலில் ஜனாதிபதி தேர்தல் வந்துள்ளது. ஏற்கனவே ஒன்பது மாதங்கள் வரை எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத அரசியல்வாதிகள் இப்போது நவம்பர் மாதம் இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலிலேயே குறியாக இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து, கண்ணீர் சிந்துகின்ற மக்கள் குறித்து இவர்களுக்கு எதுவித அக்கறையும் இல்லை.

லட்சக்கணக்கான மக்கள் இயற்கையால் பாதிக்கப்பட்டு வாழ்விழந்து இருக்கின்ற சூழலில் இது குறித்த எந்த அக்கறையும் இந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் காட்டவில்லை. அவர்கள் சார்ந்த கட்சிகளும் கூட பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து எந்தவித கரிசனையும் காட்டவில்லை. மாறாக ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ சுனாமி அதிகாரசபையை கலைக்க வேண்டும் என்ற ஜே.வி.பியின் நிபந்தனையை ஏற்று கைச்சாத்திட்டிருக்கிறார். இது இன்றைய சூழலில் மிக மோசமான குற்றமாகவே கருதப்படவேண்டி உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டிய அரசியல்வாதிகள் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிக்கச் செய்யும் செயல்களில் ஈடுபடுவது நிச்சயமாக குற்றமாகவே கருதப்பட வேண்டும். விசேடமாக பொறுப்பற்ற முறையில் தேவையற்ற இனவாத பிரச்சாரங்களை பரப்பி நிலைமையை மேலும் மோசமாக்கி வருகின்ற ஜே.வி.பி கட்சியினரின் செயற்பாடுகள் சட்டரீதியாக ஆராயப்பட வேண்டியவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திக்கும், நாட்டின் சகல மக்களின் மேம்பாட்டுக்கும் தடையாக உள்ள ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகளின் செயற்பாடுகள் கட்டாயமாக ஆராயப்பட்டு அவர்களது நடவடிக்கைகள் முடக்கப்பட வேண்டிய காலம் வந்தள்ளதாக தெரிகின்றது. தவறிழைக்கின்ற பொது மக்களுக்கு தண்டனை வழங்குகின்ற சட்டம் பொதுமக்களது நல்வாழ்வுக்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ள இந்த இனவாத கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தண்டனை வழங்க வேண்டியது அவசியமாகும். இதுவே இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

## தீர்மான சக்திகள் யார்?

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஒரு குறித்த பொருளாதார அல்லது அரசியல் கொள்கையினூடாக எமது நாடு கட்டியெழுப்பப்படவில்லை. காலனித்துவவாதிகளினது பிடியிலிருந்து இலங்கை விடுபட்டாலும் அவர்கள் உருவாக்கிய அரச முறைமையே வெவ்வேறான அரசாங்கங்களினூடாக இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இதன் விளைவு இலங்கையின் அனைத்து பொருளாதார மட்டங்களிலுமுள்ள அல்லது அனைத்து இனங்களையும் திருப்திபடுத்தக் கூடிய ஒரு அரசியல், பொருளாதார பாரம்பரியத்தை எம்மால் உருவாக்க முடியாது போனது. பிரித்தானியர்கள் நாட்டிலிருந்து வெளியேறும் போதே இவற்றை பற்றி எல்லாம் சிந்திப்பதற்கு வாய்ப்பளிக்காத வகையில் தமது பிரித்தாளும் பாரம்பரியத்தை இலங்கையிலும் விதைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். எனவே எமது மக்களும் தத்தமது இனத்துக்கான அதிகாரத்தை கைப்பற்றி கொள்ளும் முயற்சியில் ஆரம்பத்தில் இருந்தே போட்டியிட தொடங்கி விட்டனர். குறிப்பாக சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்திற்குள் தள்ளப்பட்டனர். இது நாளடைவில் பாரிய இன கொந்தழிப்பை நாட்டில் உருவாக்கி நீண்டதொரு சிவில் யுத்தமொன்றே இலங்கையில் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது. அடிப்படையில் இலங்கை ஒட்டுமொத்த தேசமாக எதிர்நோக்கிய தேசிய பிரச்சனைகளான வறுமை, கல்வி வளர்ச்சி, ஸ்திரமான பொருளாதார நிலை போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாத நிலையிலேயே ஏறத்தாழ அரை நூற்றாண்டை கடத்த வேண்டிய நிலையை நாட்டில் உருவான பிற்போக்கு அரசியல் முரண்பாடுகள் ஏற்படுத்திவிட்டன.

எனினும் ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களும், ஜனாதிபதியும் தம்மை கொள்கை அடிப்படையில் இயங்கும் தலைவர்களாகவும், தம்மிடம் இலங்கையின் அரசியல், பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு இருப்பதாகவும் கூறி கூறியே ஆட்சிக்கு வருகின்றன. இன்று மக்கள் உருவாக்க இருக்கும் புதிய ஜனாதிபதியும் இத்தகைய வாக்குறுதியுடன் தான் ஆட்சிக்கு வருவார். எனினும் இந்த வாக்குறுதிகளின் நிலையும் வழமைபோன்றதே என்பதை தயக்கமின்றி கூறலாம்.

இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் தம்மை வெவ்வேறான வெளிநாட்டு உள்நாட்டு கொள்கையுடையவர்களாக காட்டிக்கொண்டாலும் அவர்கள் செயற்பாடுகளின் அடிப்படை ஒன்றாகவே இருக்கின்றது. இதற்கு பிரதானமானதொரு காரணம் இருக்கின்றது. ஏனெனில் இன்றைய நவீன உலக ஒழுங்கில் எந்தவொரு வளர்முக, அல்லது 3ம் உலக நாடும் தமது கொள்கைகளின் அடிப்படையில் இயங்குவதை விட பிராந்திய மற்றும் சர்வதேச வல்லரசுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே இயக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. எனவே அந்த தலைவர் நாட்டுக்கு வந்தாலும் பாரிய மாற்றங்களை உள் நாட்டில் உருவாகுவதற்கான சந்தர்ப்பம் மிகவும் அரிதாகும்.

- இக்பால் அஜீட்.

இறைமையுள்ள நாடுகள் உலகில் எத்தனை உள்ளன என கேள்வி எழுப்பும் அளவில் சர்வதேச வல்லாதிக்க அரசுகளின் தலையீடுகள் வளர்முக மற்றும் மூன்றாம் உலக நாடுகளில் பாரியளவில் நிலவுகின்றன. தத்ததமது நாட்டுக்கான அரசியல் பொருளாதாரத் திட்டங்களை வளர்முக நாடுகள் உருவாக்கினாலும் அவை வல்லரசுகளின் ஒப்புதலுக்கு விடப்பட்டே அமுல்படுத்த வேண்டிய நிலை ஏறத்தாழ அனைத்து நாடுகளிலும் நிலவுகிறது. இந்நிலை இலங்கைக்கு மட்டும் விதி விலக்கானது அல்ல. இன்றைய முதலாளித்துவ உலகில், உலகை தமது பொருட்களுக்கும் தமது சிந்தனைகளுக்குமாக சந்தையாக மாற்றுவதற்கான முயற்சியின் பிரதிபலிப்பே வல்லரசுகளின் இத்தகைய தலையீடாகும். உலகமயமாதலை பெரும் சர்வதேசப் புரட்சியாக இனம்காட்டும் இந்த வல்லரசுகள் தமது பல்தேசிய கம்பனிகளை ஏனைய நாடுகளில் ஸ்தாபிப்பதன் மூலமாகவும், சர்வதேச உதவி மற்றும் மேற்பார்வை நிறுவனங்களின் தலையீடுகளின் ஊடாகவும் வறியநாடுகளுக்குள் இலகுவாக நுழைந்து விடுகின்றன. இவ்வாறு நுழையும் போது நாட்டுக்கு நாடு வேறுபாடான கலாச்சாரங்களையும் பொருளாதார மரபுகளையும் இவர்கள் சந்திக்கின்றனர். அவை இவர்கள் விரும்பும் முழுமையான மேலாதிக்கத்தையும் பொருளாதார வலுவடைவையும் அடைந்து கொள்வதற்கு ஏதுவாக காணப்படுவதில்லை. எனவே இவர்கள் உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் தமது சிந்தனைசார் அரசியல், பொருளாதார சமூகமொன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த பிராந்தியங்கள் தம்மை அனுசரித்து செல்லக்கூடிய அல்லது தமது சிந்தனைகளையும் பொருட்களையும் நுகரக்கூடிய மனோபாவத்தை ஏற்படுத்த திட்டமிட்ட முறையில் இயங்குகின்றனர். உலகமயமாதலை, அனைவருக்குமான உலகம், கிராமமாக மாறிவரும் நவீன உலகென விதம் விதமாக பிரச்சாரப்படுத்தி வரும் வல்லரசுகளின் உண்மை இலக்கு இதுவேயாகும் என்பதை சர்வதேச விவகாரங்களில் அவை அடிக்கடி காட்டி வரும் முரண்பட்ட நிலைப்பாடுகளின் ஊடாக இலகுவாக புரிந்து கொள்ளலாம்.

எனவே இலங்கையின் இனப் பிரச்சினைத்தீர்வாக இருந்தாலும் அல்லது எதிர்கால பொருளாதார மேம்பாடாக இருந்தாலும் அது பிராந்திய வல்லரசுகளான இந்தியா, சீனாவினது அல்லது சர்வதேச வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே அமையப்போகின்றன. பொருளாதாரத்தன்னிறைவு இல்லாத, அனைத்துக்கும் வல்லரசுகளின் கையை எதிர்பார்த்து நிற்கும் இலங்கையை பொருத்த வரையில் இந்த நிகழ்ச்சி நிரலை பின்பற்றுவதையே அது தீர்வாகக்கொள்ளும். எனவே நாட்டின் புதிய தலைவரோ, அரசியல் கட்சிகளோ, அல்லது மக்களோ இலங்கையின் பிரதான தீர்மான சக்திகள் அல்ல. மாறாக நவ காலனித்துவத்தின் மூலம் உலகை ஆண்டுவரும் முதலாளித்துவ வல்லரசுகளே பிரதான தீர்மான சக்திகள் என்பதே யதார்த்தமாகும்.

## புரிந்துணர்வுடன் இளைய தலைமுறை

இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு வளர்க்கப்படுகின்ற போது அங்கு ஐக்கியமும், ஒற்றுமையும், சமாதானமும் ஏற்படும் என்பதற்கு கடந்த 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வவுனியா மாவட்டத்தில் இடம் பெற்ற இளைஞர் முகாம் சிறந்த ஒரு எடுத்து காட்டாகும். மேலும் இன, மத, மொழி போன்ற காரணிகள் நாட்டின் ஐக்கியத்துக்கும், ஒற்றுமைக்கும் தடைகளல்ல என்பதை இவ்விளைஞர்களின் ஒன்றுகூடல் உணர்த்துகின்றது. இனத்தால், மதத்தால், மொழியால், பிரதேசத்தால் வேறுபட்ட நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் போரூட் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய இளைஞர் முகாமில் பங்கு கொண்டு ஒன்றிணைந்து செயலாற்றியமை அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது.

- ஏ. உசாமா

நாட்டின் நாலா பகுதிகளில் இருந்து சுமார் 800 இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்ட இவ்விளைஞர் முகாம் ஆளுமைவிருத்தி, பால் சமத்துவம், முரண்பாட்டு தீர்வு என்ற மூன்று பிராதான விடயங்களை அடிப்படையாக கொண்டிருந்தது. இம்முகாமானது இங்கு பங்கு கொண்ட இளைஞர்களின் திறன்களையும், ஆற்றல்களையும் வளர்த்து கொள்வதற்கு சிறந்த ஒரு களமாக இருந்தது. தமது ஆற்றல்களையும், திறமைகளையும் இனம் கண்டு அவற்றை நெறிப்படுத்தி கொள்வதற்கு ஒரு மேடையாக அமைந்தது. இங்கு நடைபெற்ற கலை, கல்வி கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் முழு ஈடுபாட்டுடன் இளைஞர்கள் பங்கு கொண்டதுடன் பல ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இன, மத, மொழி வேறுபாடுகளை கடந்து சகோரதத்துவத்துடன் பழகுவதற்கும், தமது அபிப்பிராயங்களையும், கருத்துகளையும் பரிமாற்றிக் கொள்வதற்கும் இம்முகாம் இவர்களுக்கு பெரிதும் துணை புரிந்தது.

அதேபோல் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர்கள் யுத்தத்தின் பாரதூரத்தையும் அது ஏற்படுத்திய வடுக்களையும் அதனால் பாதிப்புற்ற மக்களின் தற்போதைய வாழ்க்கை நிலையையும் புரிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக இம்முகாமை பயன்படுத்தி கொண்டனர். மேலும் இவர்கள் பல குழுக்களாக பிரிந்து வவுனியா மாவட்டத்தில் காணப்படுகின்ற அகதி முகாம்கள், கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றுக்கு சென்று அந்த மக்களின் தற்போதைய நிலையையும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளையும் அறிந்து கொண்டதோடு அவர்களுக்கு பல உதவிகளை செய்தது சிறந்த ஒரு அனுபவமாக அவர்களுக்கு இருந்தது. அதேபோல் நடைபெற்ற கலை கலாசார நிகழ்வுகளூடாக அந்தந்த சமூகங்களினது கலாசார பண்பாடுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியதொரு சிறந்த ஒரு அறிமுகம் இவர்களுக்கு கிடைத்தது. இது இவர்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தியது. மொத்தத்தில் வவுனியா மாவட்டத்தில் போர்கால சூழல்களில் மக்கள் பயணிப்பதற்கு தயங்கிய ஒரு நிலைமாறி இன்று இவ்வாறு சுதந்திரமாகவும், சநதோசமாகவும் இந்த நான்கு நாட்களையம் இவ்விளைஞர், யுவதிகளுக்கு கழிக்கமுடிந்தது மட்டுமல்லாது வவுனியா வாழ் மக்களுக்கும் கூட இந்நிகழ்வு புதியதொரு அனுபவத்தையும், புத்துணர்வையும் அளித்தது என்றே கூறவேண்டும்.

**இவ்வார விழிப்பில்...**

- காணித்தட்டுப்பாடும் அம்பாறையின் புனரமைப்பும்
- சுனாமிப்பணியில் உதவும் கரங்கள்
- சமாதானத்தூரிகை
- வவுனியாவில் இளைஞர் சந்திப்பு
- 'தீர்த்த' ஓவியக்கண்காட்சி

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# சச்சின் மின் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை 04

## தீராத விளையாட்டுப்பிள்ளை

பத்து வயதான சச்சின், அப்போதுதான் தன் பள்ளி மைதானத்தைவிடப் பெரிய மைதானம் ஒன்றைக் கண்ணால் பார்க்கிறான். எங்கு பார்த்தாலும் பச்சைப் புல்வெளி, சுற்றிலும் சத்தமிடுகிற மக்கள கூட்டத்தின் உற்சாகம், தொலைக்காட்சியிலும் செய்தித் தாள்களிலும் பார்த்துப் பரவசப்பட்ட அவனது நாயகர்கள் கண்ணெதிரே- அதோ கபில்தேவ் ஸ்லிப்பில் காலை மடித்து உட்கார்ந்து எழுவது கவாஸ்கர். ஐயோ, அங்கே வருவது யார் ரிச்சர்ட்ஸா? ஒவ்வொன்றாகப பார்க்கப் பார்க்க அந்தச் சிறுமனது கொள்ளாத சந்தோஷமும வியப்பும் நிறைவும் பொங்கியது.

சச்சினின் அதிர்ஷ்டம், அவனது கனவு நாயகரான விவியன் ரிச்சர்ட்ஸ அன்று சதமடித்தார். அவரது ஒவ்வொரு அசைவையும், ஒவ்வொரு ரன்னையும், ஒவ்வொரு பவுண்டரியையும் சச்சின் தனக்குள் அழுத்தமாகப் பதித்துக் கொண்டான். மறக்கமுடியாத அன்றைய அனுபவம்தான் அவனுக்குள் முதல் ஆர்வத் தீயைக் கொளுத்திப்போட்டது. அதுவரை டென்னிஸ் பந்தில் கிரிக்கெற் விளையாடிக்கொண்டிருந்த சச்சினை நிஜ கிரிக்கெற் கற்றுக்கொள்ள வேண்டும். நிறைய விளையாட வேண்டும். சாதனைகள் செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆசை கொள்ளச் செய்ததாக அஜித் டெண் டுல்கர் சொல்கிறார். "உரிய சந்தர்ப்பத்தில் சரியான பயிற்சி கொடுத்தால் இந்தப் பையன் பெரிதாக வருவான்" என்று சச்சினைப பற்றி அவர் நினைத்திருந்த கருத்து மேலும் வலுப்பட்டது.

அந்தச் சிறு வயதில் நிஜ கிரிக்கெற் பந்து எப்படியிருக்கும் என்று கூட பார்த்திராத டென்னிஸ் பால் கிரிக்கெற்றர் சச்சினுக்கு அண்ணன் அஜித் டெண்டுல்கரின் மேல் மிகுந்த மரியாதை உண்டு. அவர் நன்றாக கிரிக்கெற் விளையாடக்கூடியவர் என்பதால் கூடுதல பாசம்! (இன்றைக்கும் பேட்டிங், பந்துவீச்சு தொடர்பான டெக்னிகல் விஷயங்களில் எந்த சந்தேகமானாலும் சச்சின் தன் அண்ணனைத் தான் முதலில் அணுகி ஆலோசனை கேட்கிறார்!)

நான் எப்போது நிஜ கிரிக்கெற் விளையாடுவது? என்று சச்சின் அவரை நச்சரிக்க அஜித் டெண்டுல்கர் அவனுக்கு சில பயிற்சிகளைச் சொல்லித் தந்தார். உதாரணமாக தனக் அறைக்குள்ளேயே ஒரு சாக்ஸினுள் பந்தைக் கட்டித்தொங்கவிட்டு அதைத் திரும்பத் திரும்ப அடித்துப் பயிற்சி செய்வது.



இவ்வாறாக சச்சினின் அறைக்குள்ளும் காலனி அல்லது பள்ளி மைதானத் திலும் ஒரு குடிசைத்தொழில் போல மெல்ல நகர்ந்து கொண்டிருந்த சச்சினின் கிரிக்கெற் வாழ்க்கையில் திருப்புமுனை வழக்கமான அவனது ஒரு சிறுபிள்ளைக் குறும்பினால் விளைந்தது.

அன்று ஞாயிறுக்கிழமை விடுமுறை நாள் சாஹித்ய சஹவாஸின் பெரும்பாலான வீடுகளில் தொலைக்காட்சியில் பிரபலமான ஹிந்திக் திரைப்படமொன்றை ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சச்சினுக்கும் தோழர்களுக்கும் கை துறுதுறுவென்றாக ஒரு மாமரத்திலிருந்து மாங்காய்களைத் திருடத் தீர்மானித்து அதன் மேலேறி ஆளுக்கொரு கிளையில் அமர்ந்துகொண்டார்கள்.

சச்சின் தனது கிளையிலிருந்து மாங்காய்கள் அனைத்தையும் தீர்த்தபிறகு அடுத்த கிளையைத் தேடினான் நண்பன் சுனில் அமர்ந்திருந்த கிளையில் நிறைய மாங்காய்கள் இருப்பது கண்ணில்பட வேகமாக அங்கே தாவப்போனான்.

சுனில் சிறு வயதிலிருந்தே நல்ல குண்டு என்பதால் அவன் உட்கார்ந்திருந்த கிளை ஏற்கனவே அவனது கனத்தைத் தாங்க முடியாமல் ஒடியலாமா என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தது. இந்த லட்சணத்தில் சச்சினும் அங்கே வந்தால் என்னாவது? இதை யோசித்த சுனில் சச்சினைப் பிடிவாதமாகத் தடுத்து நிறுத்தினான். சச்சினா கேட்கிற ஆள்? சுனில் பயப்படுவதைப் பார்த்த பிறகு அந்தக் கிளையில் உட்கார்ந்து பார்க்கவேண்டும் என்கிற ஆசை இன்னும் அதிகமாகி முரட்டுத்தனமான வெறியாகிவிட்டது. வேகமாக சச்சின் அந்தக் கிளையில் குதித்து உட்கார அதுதான் சந்தர்ப்பமென்று அந்தக் கிளை படாரென்று ஒடிந்து தரையில் விழுந்தது. சுனிலும் சச்சினும் திசைக்கொருவராக விழுந்தார்கள்.

சத்தம் கேட்டு காலனிக்குள் இருந்த மக்கள் டி. வி. யிலிருந்து கலைந்து ஓடிவந்தார்கள். சச்சினுக்கு அப்போதுதான் நிலைமை புரிந்தது. சுனிலைப் பிடித்து இழுத்துக்கொண்டு தலைதெறிக்க எங்கோ ஓடிப்போனான். திரும்பிவந்தால் தர்ம அடி நிச்சயம் என்று பயந்துகொண்டு வெகுநேரம் வரை வெளியே சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்கள் இருவரும்.

அன்று இரவு சச்சினின் வீட்டில் தீவிர விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது. சச்சின் மேல் நீண்ட குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு அதன் இறுதியில் தீர்ப்பு வாசிக்கப்பட்டது இவனை இப்படியே அலையவிட்டால் என்றைக்காவது கை/கால் உடைத்துக் கொண்டுதான் நிற்பான். ஆகவே இவனது முழு கவனத்தையும் வேறு எதிலாவது திருப்பியே ஆகவேண்டும்.

வேறெதில்? அதை அவனுடைய அண்ணன் அஜித் டெண்டுல்கா தீர்மானித்தார். அவரது அந்த முடிவு சச்சினுக்கு மட்டுமில்லை. இந்திய கிரிக்கெற்றுக்கே முக்கியமானதாக அமைந்தது. (தொடரும்)

# செய்தித் துளிகள்

## ஜய்க்கா நிறுவன அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜய்க்கா நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று யாழ். குடாநாட்டிற்கான விஜயம் ஒன்றை மேறகொண்டு, கடந்த 27ஆம் திகதி பலாலி படைத் தலைமையகத்திற்கு சமுகமளித்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தியது.

ஜயக்கா நிறுவனத்தின் உப தலைவரும் பிரதிநிதிகளும் பலாலி தலைமையகத்திற்கு சமுகமளித்து பலாலி தலைமையகத்தின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஆர்.என்.எம். ஜே. எ.இரத்னாயக்கவுடன் யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு, மோதல தவிர்ப்பு உடன்படிக்கை மீறல், உயர் பாதுகாப்பு வலயம் போன்ற விடயங்கள் குறித்து நீண்டநேரம் பேச்சுவார்த்தையில ஈடுபட்டனர். (ந)

## முதியோர் வார சிறுவர் தினவிழா

(சில்லாலை)

சர்வதேச முதியோர் வார, சிறுவர் தின விழா எதிர்வரும் 4ஆம் திகதி யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிரதேச செயலாளர் ம. பற்றிக் நிறஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருநதினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக உதவி அரச அதிபர் வே. வீரபத்திர பிள்ளையும் யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராசாவும கலந்துகொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை யாழ்.பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி க.சிவராசாவும் சிறப்புரையை பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் பிரதியதிபர் துரை ஆரோக்கிய தாசனும வழங்கவுள்ளனர். (த-7)

## தேசிய அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

7/8, கோவில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வசிக்கும் கு.அருணா என்பவரது 792845835V இலக்க தேசிய அடையாள அட்டை கடந்த 25ஆம் திகதி மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துக்கு அதனை ஒபபடைக்கவும். (து)

## பிரதேச செயலகம் திறப்பு

(சாவகச்சேரி)

நீர்ப் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரு மாடிகளைக் கொண்ட பிரதேச செயலகம் எதிர் வரும் 7ஆம் திகதி யாழ் மாவட்ட அரச அதிபர் கே.கணேஷினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (த-108)

## இசை, நடன நாடகவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாடட லுவல்கள் விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம நடாத்தும் இசை, நடன, நாடகவிழா எதிர்வரும் 4ஆம் திகதி பிப.4மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபதில் கல்வி அமைச்சின்செயலாளர் ஆ.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆசிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். (த-9)

## போத்தல் கள் விற்பனை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நாரந்தனை போத்தலில் கள் அடைக்கும் தொழிற் சாலையில இருந்து போத்தல்கள் தருவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒரு போத்தல் கள்ளின் விலை 30 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## நேர்முகப் பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பிரிவில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகட் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ச-108)

## சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து குவைத் சென்றுள்ள தொழிலாளர்களின் மாதாந்த சம்பளம் அதிகரிக்கப்படும் என அந்தநாட்டு அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் அந்தத் தீமானம் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இதுகுறித்து தெரிவிக்கையில், இலங்கையில் இருந்து குவைத் சென்றுள்ள தொழிலாளர்கள் இந்த அதிகரித்த சம்பளத்தை அடுத்த மாதததிலிருந்து பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப பிட்டுள்ளது.

வெளிநாட்டுத் தொழிலாளர்களின ஆகக் குறைந்த மாதாந்த சம்பளத்தை 170 டொலர்களாக குவைத் அரசாங்கம் சமீபத்தில் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-7)

## கடல் அணை, வான்கள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கின் கடற் பகுதிகளான பருத்தித்துறை முதல் தொண்டைமானாறு வரையான பகுதிகளில் கடல் அணைகள், வான்கள் முதலியவற்றின் புனரமைப்புப் பணிகள் ஜேர்மன் அக்றோ அக்சன் /சேவா லங்கா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறை வரையிலான பகுதிகளில் வேலைகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் கனரக வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக 22ஆம் திகதி முதல் இரு தினங்களுக்கு தடைப்பட்டிருந்த புனரமைப்பு வேலைகள் தற்போது தொடாந்து நடைபெற்றுவுருகின்றது. (து-21)

## சுனாமி நிவாரண அட்டை வழங்க இலஞ்சம் பெற்ற கிராம சேவகர் கைது

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்ம ஒன்றுக்கு சுனாமி நிவாரண அட்டையொன்றை வழங்குவதற்காக இலஞ்சம் பெற்ற கிராமசேவகர் ஒருவரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்துள்ளார்கள். புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த கிராமசேவகர் ஒருவரே இலஞ்சம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யபபட்டுள்ளார்.

சுனாமி நிவாரண முத்திரையை வழங்குவதற்காக 1500 ரூபாவினை இலஞ்சமாகக் கோரி முன்னதாக 500 ரூபாவினை பெற்றுக்கொண்டவர் மிகுதி 1000 ரூபாவினை பெற்றுக் கொள்ளும் போதே இலஞ்ச் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின பணிப்பாளர் நாயகம் நெவில் குருகே கூறினார். (து-8)

## அதிருப்தி மனுக்களை அனுப்ப வேண்டுகோள்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின நடவடிக்கையை கைவிட வலியுறுத்தி ஐரோப்பிய தமிழ் அமைப்புக்கள் மற்றும் புத்திஜீவிகள் தங்கள் அதிருப்தியையும் வேண்டுகோள்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

இது தொடர்பான மனுக்களை தொடர்ந்து அனுப்பிவைக்குமாறும் பொதுமக்களையும் புத்திஜீவிகளையும ஐரோப்பிய தமிழ் அமைப்பு கேட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் மீதான நடவடிக்கை தமிழ் மக்களிற்கு எதிரான விடுதலைப் புலிகள் பேச்சுவாாதததை மற்றும் போர்நிறுத்த உடன்பாடுகளில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் ஐரோப்பிய ஒன்றியம் இணக்க முயற்சிகளின் பிரதான ஆதரவாளராக இருப்பதால் நடுநிலையுடன் செயற்படுவது அவசியம் அதன் அறிவிப்பு நடுநிலையானதல்ல. விடுதலைப் புலிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்வதும் கருத்துக்களை சொல்வதும் தடுக்கப்படுவது வேதனைக்குரியது.

சிங்கள தேசியவாதிகளை இது பலப்படுத்தி போரிற்கு இட்டுச்செல்லும். ஆகியவை அம் மனுக்களில் இடம்பெறவேண்டும எனத தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## பனையால் விழுந்து மரணம்

(கோப்பாய்)

பனை மரத்தில் ஓலைவெட்ட ஏறியவர் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கோப்பாயில் நடைபெற்றுள்ளது.

ஒரு பனையிலிருந்து பக்கத்திலுள்ள மற்றப் பனைக்கு ஓலைவெட்ட தாவிய போதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கோப்பாய் மத்தியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மு. விஜயரட்ணம் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (த-79)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவை ஆதரிக்கிறார் கிறிஸ்டினா றொக்கா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுக்கு அமெரிக்கா தனது ஆதரவினைத் தெரிவித்துள்ளது.

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்கச் செயலாளர் கிறிஸ்டினா றொக்கா கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கையை அமெரிக்கா வரவேற்கிறது. தடையை விதிதத தன் நோக்கம் நிறைவேறும் வரை விடுதலைப் புலிகள் தடை நீடிக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவானது தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த சர்வதேச நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமனைக் கொன்றவர்கள தண்டனையிலிருந்து தப்பித்து விடககூடாது. நியூயோர்க்கில் நடைபெற்ற டோக்கியோ இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில இக் கருத்து முடிவுசெய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருக்கும் நாடு என்கிற அடிப்படையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என றொக்கா தெரிவித்துள்ளார். (த-4)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

# INTERNATIONAL CRICKET COUNCIL

2


## ஐ.ஸீ.ஸி நிறைவேற்று சபையும்,

## ஐ.ஸீ.ஸி வரையறுக்கப்பட்ட அபிவிருத்தி பணிப்பாளர் சபையும்


ஐ.ஸீ.ஸி நிறைவேற்று சபை (ICC EXECUTIVE BOARD)யும் ஐ.ஸீ.ஸி வரையறுக்கப்பட்ட அபிவிருத்தி 'சர்வ தேசம்' பணிப்பாளர் சபையும் (ICC DEVELOPMENT (INTERNATIONAL) LTD) அதாவது ஐ.ஸீ.ஸியின் பொருளாதாரக் கரமும் ஐ.ஸீ.ஸியின் தலைவர் கள், முதல்வர்கள் உட்பட பத்து முழு அங்கத்துவ நாடுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

அத்தோடு மூன்று பிரதிநிதிகளை இணைந்த அங்கத்துவ நாடுகளிட மிருந்து தெரிவுசெய்துள்ளது. இவ் அமைப்பே சர்வதேச கிரிக்கெற்றின் முக்கிய கொள்கை அமைப்பாக விளங்குகிறது.

ஐ.ஸீ.ஸி வரையறுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிப்பாளர் சபையே அனைத்துலகக் கிரிக்கெற்றோடு இணைந்த பிரதிநிதி மற்றும் பொருளாதாரக் கொள்ளைகளுக்கு பொறுப்பர்க உள்ளது. அதேவேளை ஐ.ஸீ.ஸி நிறைவேற்றுசபை, பிரதான நிறைவேற்றுக் குழுவிடமிருந்து சிபார்சுகளை எடுத்துக்கொள்கிறது. அத்தோடு



தலைவர் : ஈசன் மானி



பிரதம நிறைவேற்று அதிகாரி: மல்கம் ஸ்பீட்



ஐ.ஸீ.ஸியின் உதவித் தலைவர் பேர்சி சொன்

ஐ.ஸீ.ஸி அமைப்புக்குட்பட்ட விவகாரங்களையும் மேற்பார்வை செய்கிறது.

### கிரிக்கெற் மத்தியஸ்தர்களும் போட்டி நடுவர்களும்

இவர்கள் மிக அனுபவசாலிகளான முன்னாள் சர்வதேசக் கிரிக்கெற் வீரர்கள் ஆவர். இவர்கள் அனைத்து டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஐ.ஸீ.ஸியின் சுயாதீனப் பிரதிநிதிகளாகச் செயற்படுவர். அணி வீரர்கள், அதிகாரிகள் பற்றி அறிக்கை வழங்கும் அதிகாரம் இவர்களுக்குக் கிடையாது. ஆனால் ஐ.ஸீ.ஸியின் நன்னடத்தைக் கோவையினை அமுல்செய்வதற்குப் பொறுப்பாய்





பொப் மெறிமென் (அவுஸ்ரேலியா)  முஹமட் அலி அஸ்கா (பங்களாதேஷ்)





டேவிட் மோர்கன் (இங்கிலாந்து)  ஜக்மோகன் டால்மியா (இந்தியா)





சேர். ஜோண் அண்டர்சன் (நியூசிலாந்து)  சஹார்ஜர் கான் (பாகிஸ்தான்)





ஜயந்த தர்மதாச (இலங்கை)  றேய் மாலி (தென்னாபிரிக்கா)





கெனத் கோடன் (மேற்கிந்தியா)  பீட்டர் சின்கோகா (சிம்பாப்பே)

### இணைந்த அங்கத்தவர்கள்





மஸ்கார் கான் (அரபு இராச்சியம்)  துங்கு இம்ரான் (மலேசியா)



ஸ்ரான்லி பேர்ள்மன் (இஸ்ரேல்)

இருந்து தேவையேற்படின் தண்டங்களையும், தண்டனைகளையும் (போட்டியின்போது) விதிக்கும் பொறுப்புடையவாராயிருப்பர்.

ஐ.ஸீ.ஸி மூன்று செயற்பாட்டுக் குழுக்களைக் கொண்டது.

*எமிரேட்ஸ் (Emirates) எலைட் குழு - மத்தியஸ்தர்கள்.

*எமிரேட்ஸ் (Emirates) எலைட் குழு - போட்டி நடுவர்கள்.

*எமிரேட்ஸ் (Emirates) சர்வதேச மத்தியஸ்தர்கள் - ஐ.ஸீ.ஸி குழு

ஒரு கிரிக்கெற் மத்தியஸ்தரின் பணி மிகவும் கடினமானது. போட்டியின் பெரும்பகுதியினை தொழில்நுட்பம் கொண்டு நிறைவேற்றும்படி இவர்களிடம் கோரிக்கைகள் விடப்படுகின்றன. ஆயினும் கிரிக்கெற் என்பது ஒரு விளையாட்டு. அதில் ஒருபாகமாக மனித மத்தியஸ்தர்களே தொழிற்பட வேண்டும் என்னும் தத்துவத்தில் ஐ.ஸீ.ஸி இவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளது.

### மத்தியஸ்தர் ஆவது எவ்வாறு?

1.நான் மத்தியஸ்தர் ஆகியது எவ்வாறு?

2.ஐ.ஸீ.ஸியின் மத்தியஸ்தர்கள் வரிசையில் நான் அமர்ந்தது எவ்வாறு?

3.ஒவ்வொரு போட்டித் தொடருக்கும் யார் மத்தியஸ்தராக தொழில்படுவது என்று ஐ.ஸீ.ஸி எவ்வாறு முடிவு செய்கிறது?

4. மத்தியஸ்தரின் செயற்பாடுகளை ஐ.ஸீ.ஸி எவ்வாறு கண்காணிக்கின்றது?

இவைகள் மத்தியஸ்தர்கள் தொடர்பாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளாகும். இக் கேள்விகளுக்கு ஐ.ஸீ.ஸியே தனது பதிலையும் கொடுக்கிறது.

1.நான் மத்தியஸ்தர் ஆகியது எவ்வாறு?

கிரிக்கெற் சட்டவிதிகள் நடைமுறையில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை நன்கு புரிந்துகொண்ட எவரும் மத்தியஸ்தர் ஆகலாம்.ஆரம்ப சட்டவிதிகள் பாடநெறியொன்றினை பயின்றபின், மத்தியஸ்தருக்குரிய உத்திகள் பற்றிய பரீட்சியத்தையும் பெற்ற பின் கிரிக்கெற் சங்க மட்டத்திலான போட்டிகளில் மத்தியஸ்தராக பணியாற்றி அனுபவத்தையும் பெறல் வேண்டும்.

2.ஐ.ஸீ.ஸியின் மத்தியஸ்தர்கள் வரிசையில் நான் அமர்ந்தது எவ்வாறு?

ஐ.ஸீ.ஸியின் முழுமையான உறுப்பு நாடு ஒன்றின் முதற்தர போட்டிகளில் நிலைப்பாடு கொண்டவராயிருப்பின் எமிரேடஸ் (Emirates) மத்தியஸ்தர் வரிசையில் இடம்பிடிக்கமுடியும்.

ஒரு நாடு தனது முதற்தர மத்தியஸ்தர்கள் இருவரை எமிரேட்ஸ் சர்வதேச குழுவில் அனுமதிக்கும். அடுத்த மிகுதியானவர்கள் தொலைக்காட்சி மத்தியஸ்தர்களாக அனுமதிக்கப்படுகின்றனர்.

ஐ.ஸீ.ஸியின் எமிரேட்ஸ் சர்வதேசசபை உறுப்பினர்கள் தமது நாட்டின் சர்வதேச ஒருநாள் போட்டியொன்றிற்கு அனுமதி பெறுகிறார்கள் டெஸ்ட் போட்டிகளில் இவர்களுக்கு தொலைக்காட்சி மத்தியஸ்தர் பாகம் வழங்கப்படுகிறது.

இதன்பின் ஐ.ஸீ.ஸி உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் இவ் எமிரேட்ஸ் சபையினர் இடம்பெறும் தகுதியடைகின்றனர். இதனைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளுக்கு காலக்கிரமத்தின் ஐ.ஸீ.ஸியினால் இவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படு

நோயல்

கிறது.

இவர்கள் நெருங்கி அவதானிக்கப்பட்ட பின் எமிரேட்ஸ் சபையின் முழுநேர உறுப்பினர்கள் ஆகும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

3.ஒவ்வொரு போட்டித் தொடருக்கும் யார் மத்தியஸ்தராக தொழில்படுவது என்று ஐ.ஸீ.ஸி எவ்வாறு முடிவு செய்கிறது?

ஐ.ஸீ.ஸி எல்லா டெஸ்ட்போட்டிகளுக்கும் மத்தியஸ்தர்களை நியமிக்கும் அதேவேளை, அவர்களில் ஒருவரை ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கும் நியமிக்கின்றது. இதற்கென பின்வரும் நிபந்தனைகள் பயன்படுத்தப்படும்.

*போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளில் எவற்றிற்கேனும் உரியவராக மத்தியஸ்தர் இருத்தலாகாது.

*இருக்கக்கூடிய மிகச்சிறந்த மத்தியஸ்தர் அழைக்கப்படுகின்றனர்.

*மிகுந்த செயற்திறன் கொண்டவர்கள் அடிக்கடி வாய்ப்பளிக்கப்படுகின்றனர்.

*வேலைப்பளு அவதானிக்கப்படும் என்பனவாகும்.

4.மத்தியஸ்தரின் செயற்பாடுகளை ஐ.ஸீ.ஸி எவ்வாறு கண்காணிக்கின்றது?

மூன்று செயற்பாடுகளின் மூலம் இது கண்காணிக்கப்படுகின்றது.

*மத்தியஸ்தர்கள் பற்றி போட்டி நடுவரும், அணித் தலைவனும் அறிக்கை தருகிறார்கள். போட்டியின் பின் நாம் வழங்கும் பின்னூட்டல் அணித் தலைவனால் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

*மத்தியஸ்தர்களை மதிப்பீடு செய்வதற்கு ஐ.ஸீ.ஸி டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் சர்வதேச போட்டிகளின் டிவிடி (DVD)க்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு சுயாதீன மதிப்பீட்டாளர் (ஒரு முன்னாள் டெஸ்ட் போட்டி மத்தியஸ்தர்) போட்டியின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை மதிப்பீடுசெய்து புள்ளிகளை வழங்குகின்றார்.

விதிகள் பின்பற்றப்பட்டமை கருத்தில் எடுக்கப்பட்டு டிவிடி (DVD) உடன் சேர்த்து அனுப்பிவைக்கப்படுகின்றது.

*ஒவ்வொரு மத்தியஸ்தரின் முடிவையும் டிவிடி யுடன் ஐ.ஸீ.ஸி தனது சொந்த மதிப்பீட்டுடனும் வழங்கும்.

(அடுத்தவாரம் தொடரும்...)

அவரவர் கடமையை அவரவர்க்கு விதித்த படி செய்து வருவதே நலம் - சுவாமி ராமதாசர்

வலம்புரி

# சிறுவர், முதியவர்களின் உணர்வை மதிப்போம்

நேற்று சர்வதேச முதியோர்தினம். உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் இத்தினத்திற்குள் இருக்கக்கூடிய தார்ப்பரியங்கள் அனைவராலும் உணரப்படவேண்டியதொன்றாகும்.

உலகமயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இயந்திர மயமாகிவிட்ட மனித வாழ்வு இன்று அர்த்தமற்றதாகிப் போய்விட்டது.

குடும்ப உறவுகள் தாய்-பிள்ளைப்பாசம் என்பன கூட வர்த்தகமயப்படும் அளவிற்கு மனித விழுமியம் அதலபாதாளத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

இத்தகைய கொடூரமான மனித வாழ்வியல் சிதைவுகள் வெளிநாடுகளில் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும்,

அவற்றின் தாக்கம் குடும்ப உறவில் மிகவும் இறுக்கமான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த தமிழ் இனத்தையும் தாக்கவே செய்துள்ளது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பெற்றவர்களை தெய்வமாகப் போற்றி உலகிற்கே பெரும் தத்துவத்தை உணர்த்திய தமிழினம் இன்று தனது பண்பாட்டு விழுமியங்களை கைநழுவ விடுவதற்கு தயாராகி விட்டது.

வெளிநாட்டு நாகரிக நாட்டம், சினிமாவில் கொண்டுள்ள மோகம், ஓய்வின்றி உழைக்கும் தன்மை, முதியவர்களை வெறுக்கும் மனப்பாங்கு போன்றவை காரணமாக நமது மண்ணில் எத்தையோ முதியவர்கள் கவனிப்பார் இன்றி அநாதைகளாக விடப்பட்டுள்ளனர்.

கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் குதூகலமாக இருந்த ஈழத்தமிழர் வாழ்வியல், யுத்தம் என்ற கொடூரம் காரணமாக சின்னாபின்னமாகிப் போனது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் முதியவர்களும் சிறுவர்களுமே.

யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வு, குடியிருப்பதற்கு போதிய வசதியின்மை, வருமான இன்மை போன்றவை பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்த பெற்றவர்களை பிள்ளைகளுக்கு சுமையாக்கியது.

தாம் சுமந்து பெற்ற பிள்ளைகள் தள்ளாத வயதில் தம்மை சுமப்பார்கள் என்று எண்ணியிருந்த பெற்றவர்கள் பலர். முதியோர் இல்லங்களிலும் நலன் புரிநிலையங்களிலும் இருந்தவாறு முதுமையின் கொடுமையை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றனர்.

இதேபோன்று சிறுவர்களின் நிலைமையும் மிகவும் பரிதாபத்திற்குரியது. வறுமையில் வாடும் பாலர்கள் குடும்ப பாரத்தை தாங்கும் சிறுவர்கள் பெற்றவர்களை இழந்து மனித வாழ்வை வெறித்துப் பார்க்கும் அநாதைகள் என்று ஒரு பெரும் பட்டியலையே தயாரித்து விடமுடியும்.

இதற்குமேலாக மதுபோதையில் வரும் தந்தையின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை தாங்கும் பிஞ்சு டல்கள் வளர்ந்தவர்களின் கட்டளைகளை பயந்து நடுங்கி நிறைவேற்றும் குழந்தைகள் இப்படி எத்தனையோ சோகரேகைகள் எம் மண்ணில் படர்ந்து போயுள்ளன.

இவையெல்லாவற்றுக்கும் அடிப்படைக்காரணங்களாக இருக்கக்கூடியது குடும்ப உறவே. அதனை செப்பமிடுவதன் மூலமே முதியவர்கள், சிறுவர்களின் உணர்வுகளை அறியவும் அதனை மதிக்கவும் முடியும்.

குறிப்பாக தனது கணவனின் பெற்றோரை வெறுக்கும் மனையாள், மனைவியின் தாய், தந்தையரை ஒதுக்கும் கணவர் என்ற மனித நேயமற்ற குடும்ப உறவு சீராக்கப்படவேண்டும்.

இளமையில் வறுமையும் முதுமையில் தனிமையும் கொடியதுஎன்ற உண்மையை உணர்ந்து அனைவரும் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். இதுவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதி உரையாகும்.

# கல்வியை இடைநிறுத்திய நிலையில் இலங்கையில் 1,50,000 சிறுவர்கள்

(கொழும்பு)

சிறுவர்களுக்கு சிறுவர் உலகத்தை வழங்குவோம் என ஐக்கிய நாடுகள் அமைப்பு இம்முறை சிறுவர்தினத்திற்கு பெயரிட்டுள்ளது.

14 வயதிற்கு குறைந்தவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்ற குழுவில் அடங்குகின்றார்கள் நாட்டின் எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பது மூத்த தலைமுறையின் பொறுப்பாகும். எனினும் சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுதல், சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், பாலியல் துஷ்பிரயோகங்கள் என பல கொடுமைகள் சிறுவர்கள் மீது நடை பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு கடுமையான தண்டனைகள் சட்டத்தில் உள்ள போதும் தொடர்ந்தும் சிறுவர்கள் தொடர்பிலான குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படாமை கவலைக்குரியது.

இலங்கையில் ஒரு இலட்சத்து 50ஆயிரம் சிறுவர்கள் கல்வியை இடைநிறுத்தி இருப்பதாகவும் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 50ஆயிரம் சிறுவர்கள் யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தம் காரணமாகவும் இடம்பெயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# இயந்திரக் கோளாறு காரணமாக திடீரென தரையிறக்கப்பட்ட ஹெலி

(அம்பாறை)

விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று அம்பாறை உகன பிரதேசத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானது. எச்.ஐ.ரக உலங்கு வானூர்தி நேற்று முன்தினம் மாலை பயிற்சிக்காக வானில் பறந்து கொண்டிருந்த போது விமானத்தில் கோளாறு ஏற்பட்டது.

இதனையடுத்து உலங்கு வானூர்தி உடனடியாக தரையிறக்கப்பட்டபோது சேதமடைந்தாக தெரிவிக்கப்பட்டது. அம்பாறை விமானப்படை முகாமில் இருந்து இவ்வானூர்தி புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இயந்திரக்கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது பாரதூரமான விடயமல்லவென்றும் உலங்கு வானூர்திக்கு சிறிதளவு சேதமே ஏற்பட்டதாகவும் விமானப் படைப்பேச்சாளர் அஜந்த டி சில்வா கூறியுள்ளார். இந்த சம்பவத்தில் எந்தவொரு விமானப்படை வீரரும் காயமடையவில்லைஎன்றும் அவர் தெரிவித்தார். (ச)

# மூவினத்தவரும் ஒற்றுமையாக வாழும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(அம்பாறை)

நாட்டில் சமாதானம் அபிவிருத்தி ஆகிய இரண்டுமே எனது குறிக்கோளாகும் சமாதானச் சூழல் தொடர்ந்து நிலவ வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக போட்டியிடவிருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

கிழக்கு கூட்டமைப்பு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான வைபவங்களிலும் அமைச்சர் ஏ.எல்.அதாவுலலா தலைமையிலான தேசிய காங்கிரஸின் தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர் அங்கு விஜயம் செய்தா.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்பு முஸ்லிம் பிரதேசமொன்றுக்கு இவர் மேற்கொண்ட விஜயம் இதுவாகும். இவர் கலந்து கொண்ட தேர்தலில் பிரசாரமும் இதுவாகும்.

அவரது உரையில், 205 அப்பாவி முஸ்லிம்கள் பள்ளிவாசல் தொழுகையின் போது கொல்லப்பட்டதையும் முஸ்லிம்களின் காணி பறிக்கப்பட்ட தையும் நாம் ஒரு போதும் மறந்துவிட முடியாது.

இப்படியான அநியாயங்களிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுவதே எனது முதல் கடமையாகும். நாட்டில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லிம்கள் எல்லோரும் நிம்மதியாக சமாதானமாக வாழும் சூழ்நிலை உருவாகவேண்டும் நான் பதவிக்கு வந்தால் அந்த இலக்கு நிச்சயம் நிறை வேற்றப் படும் என வலியுறுத்திக் கூறினார்.

இதேவேளை, இம் மாநாட்டில் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.(த-4)

# மஹிந்தவின் அறிக்கைகளுக்கு தொலைக்காட்சியில் தடை

## ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

அமைச்சர் மங்கள சமரவீர வெளியிடும் அறிக்கைகளுக்கு தேசிய தொலைக்காட்சியில் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்திரிகாவுக்கு மங்கள அனுப்பிய முறைப்பாட்டில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ சார்பில் அவரின் தேர்தல் தொடர்பான ஊட கப பேச்சாளரான தன்னால் வெளியிடப்படும் செய்திகளை தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்ய வேண்டாம் என்று அதன் பணிப்பாளர் நாயகம் நிசாந்த ரணதுங்க செய்திப்பிரிவின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சிசிர கொதலாவலவிற்கு கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளது இது குறித்த ஆராய்ந்து உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மங்கள கேட்டுள்ளார்.

இநத சூழ்ச்சித்திட்டத்தை அறிந்த நான் அதிர்ந்து போயுள்ளேன் பக்கசார்பற்ற செய்திகளை வெளியிடுவதனை முன்னாள் ஊடகத்துறை அமைச்சரான நான் வரவேற்கிறேன். எனினும் மிக முக்கியமான இந்த சந்தர்ப்பத்தில் அனைத்து தனியார் ஊடகங்களும் எமது கட்சின் வேட்பாளரையும் எமது கட்சியையும் தாக்கிவரும் நிலையில் அரசாங்கத்தின் பதிலை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் தார்மீகப் பொறுப்பு அரச ஊடகங்களுக்கு இருப்பதாக நான் நம்புகிறேன்.

இந்நிலையில் எனது அறிக்கைகளைத் தடை செய்து விட்டு ஐக்கிய தேசியக்கட்சி தலைவரின் செய்திகளுக்கு இடமளிப்பது பற்றிய சூழ்ச்சி குறித்து ஆராய்நது நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஊடக அமைச்சருமான தங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (த-4)

# விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைய வந்த 27 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பில் தம்மை இணைக்க வந்த 18 வயதிற்கு குறைந்த 27சிறார்கள் அவர்களின் பெற்றோர்களிடம் சர்வதேச உள்நாட்டு தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் வணபிதா கருணாரட்ணம் அடிகளார் தலைமையில் யுனிசெவ் வன்னி மாவட்ட வதிவிடப்பிரதிநிதி திருமதி பொனி புறுண் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு வதிவிடப்பிரதிநிதி லாஸ்குழுவினரிடம் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறையின் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தின் பணிப்பாளர் மு.பாவரசனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தாமாக முன்வந்து சுய விருப்பின் பேரில் இணைந்து கொண்ட 27 சிறார்களும் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (த-4)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

'நான் உனது உடைமையே! நான் உனது உடைமையே!! என்று சொல்லிக்கொண்டே இரு கடவுள் எங்கும் இருக்கிறார். அவரைத் தேடித்தேடி அலைய வேண்டாம் இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டு பார்க்க முயல்.

சுவாமி விவேகானந்தர்

சைவப் பெருமக்களுக்கு ஓர் அரிய பொக்கிஷம்
பக்திப்பாடல் நூல்
இளைய தலைமுறையினருக்கு
பன்னிரு திருமுறைகள் திரட்டு
(சென்னை மணிமேகலை பிரசுரம்)
விநாய கவசம், தேவாரம் முதல் பெரியபுராணம் ஈறாக 12 திருமுறைகள், திருப்புகழ் – கந்தசஷ்டி கவசம் முதலிய முருகன் பாடல்கள், சரஸ்வதி துதி– நவக்கிரக தோத்திரம் – அபிராமி அந்தாதி, ஐயப்பன் – ஆஞ்சநேயர் கவசங்கள் – திருப்பாவை அடங்கலாக நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகியவற்றிலிருந்து தேர்வுசெய்து தொகுத்த
2425 பாடல்கள் அடங்கிய கையடக்க நூல்
592 பக்கங்கள் விலை ரூபா 650/=
தொகுப்பாசிரியர் – சி.வ.இரத்தினசிங்கம்
(C–அ- 1687)
நூல் கிடைக்குமிடம்: 'கூல் ஏயார்ஸ்' தொ.பே: 07777 38888/ 0773 144636
இல. 154 1/4 மின்சாரநிலையவீதி (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்

## மகிந்தவின்...

இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கையை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட பின்னர் அதனையும் ஆராய்ந்து தமது ஆதரவு குறித்து அறிவிக்கப்படுமென பாயிஸ் மேலும் கூறினார். (ச–4)

## நள்ளிரவு...

எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. காயமடைந்த நபர் புவனநாதன் பாலுமகேந்திரன் என தெரிய வந்துள்ளது.

இவர்கள் வாழைச்சேனை பிள்ளையார் ஆலயத்தில் மின்சார வயர் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்ததாக அப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இச் சம்பவம் நடந்த இடம் ஈ.பி.டி.பி. முகாம், இராணுவ முகாம் என்பவற்றுக்கு மிக அருகில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (ச–4)

## விடுதலைப்...

இவ் இரகசியக் குழுவில் 25பேர் இணைந்துள்ளனர். அவர்கள் உலகத்தலைவர்களை தனித்தனியே சந்தித்து விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களின் முயற்சியாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப்புலிகளை தடைவிதித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளை தடை செய்ததையடுத்து அங்கு இரகசிய குழுக்கள் களியாட்ட நிகழ்வொன்றினையும் நடத்தியுள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இப்பிரசார குழுவினருக்கு இலங்கையில் இருந்து கோடிக்கணக்கான பணம் அனுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அக்குழுவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி கீர்த்தி சுமனசிறி, துணைச்செயலாளர், நந்தா கருணாநாயக்க, ஜே.வி.பி. பொதுச் செயலாளர் தர்சன ஹெட்டிய ராச்சி, ஜாதிக ஹெல உறுமயவின் அநுரா மெடகொட, சிங்கள மையத்தின் விமல்எதிர்வீர, சட்டத்தரணிகள் சந்த சேனாதீர, டி.ஏச்.அமைப்பின் ஜோர்ச் வித்தியரட்ண, வரலாற்றுத்துறை பிரபல பேராசிரியர் லக்ஷ்மன் பெரேரா, வகுலகுணபால, பிரியந்த பெரேரா, சபுமல் விமலசிறி, பிரபல வர்த்தகர் மெலித் பெரேரா, சரத் விஜயசிங்க, சட்டத்தரணி மகிந்த பெரேரா, ஊடகவியலாளர் பந்துல ஜெயசேகர உள்ளிட்டோர் இடம்பெறுவதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (சு)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி பாரிஸில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பிரெஞ் ஜனாதிபதி ஜக்ஷினாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார். இதேவேளை ஜனாதிபதி மீண்டும் வெளிநாடு சென்றுள்ளமையை அடுத்து அவர் வகித்துவந்த பதவிகளுக்கு ஆறு அமைச்சர்கள் பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், மங்கள சமரவீர பாடசாலைக் கல்வி பதில் அமைச்சராகவும், தினேஸ் குணவர்த்தன உயர்கல்வி பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வஸந்த அழகிய வர்ண போக்குவரத்துத்துறை பதில் அமைச்சராகவும், டிலான் பெரேரா ஊடகத்துறை பதில் அமைச்சராகவும், தம்பு தஸாநாயக்க புனர்வாழ்வு பதில் அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னமும் தயாரிக்கப்படாத நிலையில் ஜனாதிபதி மீண்டும் வெளிநாடு சென்றுள்ளமை அக் கட்சியிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை ஐ.நா. சபைக் கூட்டத்திலும் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி கடந்த வியாழக்கிழமையே நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–4)

# 180 பேருக்கு நல்லாசிரியர் விருது

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 180 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்படவுள்ளது.

வடக்குக் கிழக்கின் 24 கல்வி வலயங்களிலிருந்து இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்வியமைச்சும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து நல்லாசிரியர்களைத் தெரிவு செய்துள்ளது.

உலக ஆசிரியர் தினமான ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி காலை திருகோணமலை சென். மேரிஸ் பெண்கள் கல்லூரியில் நல்லாசிரியர் விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்தார்.

நிகழ்வுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தலைமைவகிப்பார். முதன்மை விருந்தினராக மாகாணசபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா, சிறப்புவிருந்தினராக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மத்தியிலிருந்தே நல்லாசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச–4)

## சு.க...

கட்சியுடன் இணைந்துள்ள பிரதமர் மகிந்த மீது தமக்கு நம்பிக்கையில்லையெனவும் இதனால் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குதவதற்கு தாங்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்மைப்போன்று பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (சு)

அதிரடி விலைக்கழிவில்
10000/=
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M, மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
கையடக்க தொலைபேசிகள் லொக் உடைத்துக் கொடுக்கப்படும்
கையடக்க தொலைபேசி விற்பனைக்குண்டு
டயலொக் 500/=, மொபிரெல் 300/= பக்கேஜ் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகட்கு:
பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி
OFFICE: 185 முதலாம்மாடி கஸ்தூரியார் வீதி
SHOP: 205/01 கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்
T.P: 0712 - 399220, 0714 - 182500, 0773518330

கலை, வர்த்தகத்திற்கு தன்னிகரில்லா தனித்துவமான ஒரே நிறுவனம்
பிரிவு 2
விக்னா கல்வி நிறுவனம்
A/L DAY CLASS
03/10/2005 8.30
ACC - திரு.பாலவாசன்
ECO - திரு.உதயன்
B.St - திரு.முரளி
Tam - திரு. குழந்தை
Log - திரு. ஜெயந்தன்
Hin - திரு. N.T.தரன்
P/Sci - திரு. றொபின்சன்
Drama - திரு. ரமேஸ்
H/C - திரு. ஜெயக்குமார்
Geo - திரு. பாபு
Chri - திரு. வசந்தன்
Hist - திரு. பத்மன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
பிரிவு 3 மிகவிரைவில்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(C–அ-1685)

மனோகரா
இன்றுமுதல்
ஸ்ரீகாந்த், சோனியா அகர்வால் நடித்த
ஒருநாள் ஒரு கனவு
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு நமீதா நடித்த
சாணக்கியா
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
மணிகண்டன் சிம்ரன் ஜெய் ஆகாஷ் நடித்த
கிச்சா வயசு 16
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.